விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# வலம்புரி

VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 21 | திங்கட்கிழமை (07.10.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 293

# நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினர் நேற்று முற்றாக வெளியேறினர்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் இருந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறி விட்டதாக நெடுந்தீவுத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்தே ஈ.பி.டி.பி அமைப்பினர் வெளியேறிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவில் இடம்பெற்ற சம்பவம் குறித்து ஆராய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், யாழ்.பொலிசார் நேற்று அங்கு சென்றனர்.

அங்கு திரண்டிருந்த மக்கள் அவர்களை வரவேற்றுத் தாம் நேற்று முன்தினம் இரவு பிடித்து வைத்திருந்த ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த அமீன் என்பவரை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்தனர். அத்துடன் ஈ.பி.டி.பி அலுவலகத்தில் கைப்பற்றிய கைக்குண்டுகள், ஒரு தொகை ரவைகள் ஆகியவற்றையும் அவர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினமிரவு நெடுந்தீவுப் பொலிஸாரிடம் தஞ்சமடைந்த நான்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்களையும் பொலிசார் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று நெடுந்தீவுப் பகுதிக்கு நிலைமையை ஆராய்வதற்காகச் சென்ற ஈ.பி.டி.பி உறுப்பினர்களை

(10ம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் விடுதலையில்

# சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் நடுநிலையோடு செயற்பட வேண்டும்

## நேற்றைய சந்திப்பில் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(கிளிநொச்சி நிருபர்)

**திருகோணமலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களையும், விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரையும் விடுவிப்பது தொடர்பான விடயத்திலும், வருங்காலத்தில் இத்தகைய பிரச்சினைகளைக் கையாள்வதிலும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு நடுநிலை பேணி நின்று பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டேயிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.**

திருகோணமலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரையும் விடுவிப்பது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டேயிடம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.

(10ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி புலிகளின் தளபதிகளுடன் அமர்ந்திருந்ததால் படைத்தரப்பில் அதிருப்தி

19வது அரசியலமைப்பு திருத்தம்

## பாராளுமன்றத்தை ஒத்திவைக்க ஜனாதிபதி சந்திரிகா முயற்சி?

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் 'அதிகாரத்தைக் குறைக்கும் 19வது அரசியல் அமைப்புத்திருத்த சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொது ஜன ஐக்கிய முன்னணியின் உயர்மட்டக்குழுவைக் கூட்டி இரகசிய மந்திராலோசனை நடத்தி உள்ளார்.

நேற்று நடைபெற்ற இவ் உயர் மட்ட ஆலோசனைக்குழு கூட்டத்தில் 19வது அரசியல் அமைப்புச் சீர்த்திருத்தத்திற்குக் கிடைக்க கூடிய

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் பலவீனமான தலைவரை பிரபா தேர்ந்துள்ளார்

பௌஸி தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம்கள் அனைவரினதும் நலன்களை பிரதிநிதித்

கொள்ள முடியாது இதுவே எனது தனிப்பட்ட கருத்து. அவர் முதிர்ச்சியற்றவர். முஸ்லிம் சமூகத்தின் சார்பில் ...

நிலை பேணி நின்று பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டேயிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருகோணமலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரையும் விடுவிப்பது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டேயிடம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.

(10ம் பக்கம் பார்க்க)

ரத்தைக் குறைக்கும் 19வது அரசியல் அமைப்புத்திருத்த சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொது ஜன ஐக்கிய மட்ட ஆலோசனைக்குழு கூட்டத்தில் 19வது அரசியல் அமைப்புச் சீர்த்திருத்தத்திற்குக் கிடைக்க கூடிய

(10ம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தளபதி புலிகளின் தளபதிகளுடன் அமர்ந்திருந்ததால் படைத்தரப்பில் அதிருப்தி

(கொழும்பு)

எந்தவொரு நாட்டிலும் சீருடையணிந்த கெரில்லாக்கள் ஒரு படை என்னும் உத்தியோகபூர்வ அந்தஸ்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தகையவர்கள் இறைமையுள்ள ஒரு நாட்டின் படைத்தளபதிகளுடன் பக்கம் பக்கமாக இருப்பதற்கு அந்தஸ்து உடையவர்களல்லர். இவ்வாறு பெயர் குறிப்பிட விரும்பாத மேஜர் ஜெனரல் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களின் பலவீனமான தலைவரை பிரபா தேர்ந்துள்ளார்

## பௌஸி தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம்கள் அனைவரினதும் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துபவரல்லர். அதனால் முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதியாக அவர் சமாதான முயற்சிகளில் கலந்து கொள்ள முடியாது இதுவே எனது தனிப்பட்ட கருத்து. அவர் முதிர்ச்சியற்றவர். முஸ்லிம் சமூகத்தின் சார்பில் எமக்கு ஒரு பிரதிநிதி தேவையில்லை முழுநாட்டிற்கும், சகல இனங்களுக்கும் சமாதானத்

(10ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளே நெடுந்தீவு அலுவலகத்தை தாக்கினர்

## ஈ.பி.டி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நெடுந்தீவில் அமைந்திருந்த தமது அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் விடுதலைப்புலிகளின் நடவடிக்கையென ஈ.பி.டி.பி அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

இச் சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி அமைப்பு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(10ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவும் முதல்வர் ஜெயாவும் சமாதான முயற்சிகளை எதிர்க்கிறார்கள்

## சிறையில் இருந்தவாறு வை.கோ பேட்டி

(சென்னை)

இலங்கை அரசுக்கும் தமிழீழ் விடுதலைப்புலிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை சர்வதேச சமூகம் ஆதரித்து உற்சாகம் அளித்துவரும் இவ் வேளையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மட்டும் அதனை ஆதரிப்பது போல் வெளியுலகிற்கு காட்டிக் கொண்டு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றார் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வை.கோபாலசாமி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை உலக சமுதாயம் ஆதரித்து வருகிறது. இவ் வேளையில் இலங்கையின் ஜனாதிபதி சந்

(10ம் பக்கம் பார்க்க)


கணனி தொழில் நுட்பத்தோடு, விஞ்ஞான முறைப்படி ஆய்வுகூடத்தில் தரம் உறுதி செய்யப்பட்டது

சமநிலை போசனைப் பதார்த்த கலவையானது




சீ.ஐ.சீ. உரம்

இலங்கையில் சர்வதேச தரம் 9001 ஐ உறுதிப்படுத்திய ஒரே உரம் இதுவே

சீ.ஐ.சீ. பேர்டிலைசர் (பிறைவேட்)லிமிட்டெட்
205.டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை
கொழும்பு – 10

Telephone : 01 – 688200 – 2 Fax : 01 – 691909 E.mail: cicf @sltnet.lk Website: www.cicagribusinesses.com


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு

# யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

சிறைக்கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது

அவர்களின் விடுதலையை வலியுறுத்தி நாளைதமதுவிரிவுரைகளை பகிஷ்கரிக்கும் அடையாள பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கைஒன்றை வெளியிட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

அரசின் தமிழின அழிப்பின் ஓர்அங்கமாகவும் தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை நசுக்கும் ஓர்வடிவமாகவும் கடந்த இருதசாப்தங்களுக்கு மேலாக ஜனநாயக மற்றசட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு தமிழ்இளைஞர்கள், யுவதிகள்கடும்சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிறைச்சாலைகளில் இன்றுவரை எவ்விதவிசாரணையும் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளர்கள.

தற்போது நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வுஉடன்படிக்கை கைச்சத்திடப்பட்டு அமுலாக்கப்படடுவருகின்றது. இவ்ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறு இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டு மக்கள் அச்சமின்றி வாழவழி வகுக்கப்பட வேண்டும்

இதுவே தமிழ்மக்களினதும் தமிழ்த்தலைமையினதும் அபிலாஷையாகும் இதன்அடிப்படையில் அர்த்தமற்ற முறையில் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளின் சீர்குலைக்கப்பட்ட வாழ்வும்இயல்புநிலைக்கு த்திரும்புவது மிகஅவசியமானதாகும்.

பல்வேறு காலப்பகுதிகளில் தமது விடுதலைவேண்டி பல்வேறு அகிம்சைவழியான போராட்டங்களில் இவர்கள் ஈடுபட்டபோதெல்லாம் அரசினாலும் ஏனையதலைவர்களினாலும் கொடுக்கப்பட்ட போலிவாக்குறுதிகளை நம்பி ஏமாற்றப்பட்டார்கள் தற்போது விரத்தியுற்று கடந்த ஒருவாரகாலமாக மீண்டும் அகிம்சைவழியான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்நிலையில் எமது உறவுகளின் விடுதலையை உறுதிப்படுத்துவதற்காக அவர்களின் போராட்டத்திற்கு நாம் அனைவரும் வலுச்சேர்ப்பது அவசியமானதாகும்.

எனவே பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் நாளை செவ்வாய்கிழமை (08.10.2002)அன்று அவர்களது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து எமது அன்றைய விரிவுரைகளை காலை 10.00மணியிலிருந்து அடையாளமாக பகிஷ்கரிக்க முடிவுசெய்துள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## அவசரகூட்டம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாததத்தடைச்சட்டத்தின்கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் தற்போது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ள தமிழ் அரசியல்கைதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று மாலை 4மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது இக்கலந்துரையாடலுக்கு சகல மனிதநேய அமைப்புக்களின் இணைய அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சு.பரமநாதன் கேட்டுள்ளார். (ந-5)

## உண்ணாவிரதம் தொடர்கிறது

(களுத்துறை)

கடந்த ஆறு தினங்களாக நீராகாரம் எதுவுமின்றி உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் கைதிகளில் பலரின்நிலை மேலும் மோசமடைந்து வருவதாகவும் உயிருக்காகப் போராடி ஏழாவது நாளாக இன்றுஉண்ணாவிரதம் அனுஷ்டிப்பதாக எமதுசெய்தியாளர் அறிவிக்கிறார்.

தம்மை விடுவிக்கக்கோரி களுத்துறைசிறையில் உண்ணாவிரதம் இருந்துவரும் 139சிறைக்கைதிகளை எந்த ஒரு தமிழ்த்தலைவர்களும், வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் எவரும் இதுவரை பார்வையிடவில்லை

இதேவேளை கைதிகள்தளராத மனஉறுதியுடன் தமது உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# கைதிகளை விடுவிக்கக் கோரி

# அடையாள மறியல் போராட்டம்

### ஐக்கிய சோசலிசக் கட்சி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலைசெய்யவேண்டுமெனக் கோரி இன்று நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக ஐக்கிய சோசலிசக் கட்சி அடையாள மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

சிறைக் கைதிகளின் விடுதலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியே இம் மறியற் போராட்டம் இடம்பெறவுள்ளதாக கட்சியின் யாழ் மாவட்டச் செயலாளர் க.தேவதாசன் தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளஇப்போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்னிலங்கையில் தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தலை எதிர்த்து நாளை கொழும்பில் நடத்தும் கண்டனப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, ஐக்கிய சோசலிசக்கட்சி நாளை யாழ். அரச செயலகம் முன்பாக காலை 8-30 மணி தொடக்கம் அரை மணிநேரம் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இப்போராட்டத்தில் அனைத்து தொழிற்சங்கங்களையும் அரசியல் கட்சிகளையும், மற்றும் பொது அமைப்புக்களையும் கலந்துகொள்ளுமாறும் ஐக்கிய சோசலிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (இ)


வலம்புரியின்

## கல்விச் சேவை

### அன்பார்ந்த அதிபர்களே!

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் பாடசாலைகளின் தோற்றம், அவற்றின் சமூகப்பிணைப்பு, நிறுவுநர் பற்றியகுறிப்பு, மாணவர்கள் படைத்தசாதனைகள், தற்போது பாடசாலைகளின் வளர்ச்சி, தேவைப்பாடுகள் என்பனவற்றை வெளிப்படுத்தி வரலாற்றுரீதியாக ஆவணப்படுத்தும்முயற்சியில் வலம்புரியின் கல்விக்குழு ஈடுபடவுளது,

வாரத்தில் ஒருநாள்
வலம்புரியில் வலம் வரவிருக்கும்
'எங்கள் கல்விச்சாலை'
பகுதியில் உங்கள் பாடசாலையும்
இடம்பெற வேண்டுமாயின்

உங்கள் சம்மதக் கடிதத்தை

'எங்கள் கல்விச்சாலை'
வலம்புரி
இல.15 வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
வலம்புரியின் கல்விக் குழுவினர் தங்களின் பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்வர்.

அன்புசால் அதிபர்களே!

உங்கள் பாடசாலைகளின் பழம் பெருமைகளை வெளிப்படுத்த வலம்புரிதரும் அரியவாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

- ஆசிரியர்


### கைதிகளை விடுதலை செய்யாவிடின்

# பாராளுமன்றில் எதிர்ப்பு நடவடிக்கை

## அ. இ. த. கா. கட்சி எச்சரிக்கை

பயங்கரவாத தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற கொடிய சட்டங்களின் கீழ் கைதாகி, சித்திரவதைக்குட்பட்டு, விசாரணைகளின்றி நீண்டகாலம் தடுப்புக்காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை கோரி ஆரம்பித்திருக்கும் போராட்டம் நியாயமானது இதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தமது பூரண ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்கட்சி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிறைகளில்தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்அரசியல்கைதிகள் எந்தவித நிபந்தனைகளும் இன்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்; இதற்கான நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

இந்தக்கோரிக்கைக்கு சாதகமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத பட்சத்தில் நாளை மறுதினம் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம்,

இதேவேளை கைதிகளின் விடுதலை தொடர்பில் வடகிழக்கு மக்கள் மாவட்ட செயலகங்கள் முன்பாக கைதிகளுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த)

# உத்தியோகப் பணிகளுக்கு முன்பாக தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும்

## அமைச்சர் ரவி கருணாநாயக்க உத்தரவு

(கொழும்பு)

உத்தியோக பணிகளை ஆரம்பிப்பதற்கு முன் தேசிய கீதம் ஒலிபரப்பப்படல் வேண்டும் என்று எனது அமைச்சிற்கு உத்தரவிட்டிருக்கின்றேன் ஏனைய அமைச்சுகளும் இதனைப் பின்பற்றவேண்டுமென்றுநினைக்கிறேன். பாராளுமன்றக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும் தேசிய கீதம் ஒலிக்கப்பட வேண்டும் இது நாம் இலங்கையர் என்ற தேசிய உணர்வை ஏற்படுத்தும் இம் முறையானதுவேறு பல நாடுகளிலும் நடைபெறுகின்றது. இவ்வாறு நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

19 வது திருத்தச் சட்டம் பற்றி அவர் தெரிவிக்கையில்; மக்கள் ஒரு வருடத்தில் மேலும் ஒரு தேர்தலைச் சந்திக்க விரும்பவில்லை அத்துடன் அடுத்த தேர்தல் எப்போது நடைபெறவேண்டும் என்பதை ஒருநபர் தீர்மானிக்கலாகாது சட்டமூலம் தோற்றால் நாம் தேர்தலை சந்திப்போம் இப்போதுள்ளதைவிட அதிகமான ஆதரவையும் பெறுவோம் ஜனாதிபதியும் தான் தேர்தல்களை நடத்தப்போவதில்லைஎன அறிவித்திருக்கிறார்.

எனவே பொ.ஐ.மு எம்.பிகள் இதனை ஆதரித்து ஏன் வாக்களிக்கக் கூடாது?

ஜனாதிபதியின் வாக்குறுதிகளை எம்மால் நம்பமுடியாது. அவர் பொலநறுவையில் ஒன்றைக் கூறிவிட்டு பின்னர் அத்தனகலைக்கு வந்து தான் சும்மா நடித்ததாக கூறினார் அவரை எப்படி நம்புவது? அவரது கட்சிக்காரர்களே அவரை நம்பமறுக்கின்றனர். பொ.ஐ.முன்னணியுடன் அரசியற்சகவாழ்வு சாத்தியமென்றாலும் ஜனாதிபதியுடன் அது சாத்தியமில்லை ஒருசிலர் அரசியல் சகவாழ்வை விரும்புகிறார்கள். ஊழலைமறைப்பதற்கு அதுநல்லது என்று நினைக்கிறார்கள். வர்த்தக சலுகைகளுக்காகவும் விரும்புகிறார்கள். நாட்டுநலன்களுக்கான அரசியற்சகவாழ்வே வரவேற்கத்தக்கது இவ்வாறு அமைச்சர் சண்டே லீடர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டுள்ளார். (ந)

## முன்னாள் அமைச்சர்

# மங்களவிற்கு சொகுசு வசதிகள்

# வழங்க தாம் கோரவில்லையாம்

### ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு,

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவுக்கு சொகுசுவசதிகள்வழங்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க கோரவில்லை என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினரான மங்கள சமரவீரவுக்கு சொகுசு வசதிகள் வழங்க வேண்டு மென்றுஜனாதிபதியின்அமைச்சரவை பத்திரத்தை ஆளும் கட்சி அமைச்சரவை நிராகரித்துள்ளதாகஊடகங்களில்வெளியான செய்தியினை மறுத்து ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி பாராளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும்,

பாராளுமன்ற செயற்குழுவும் இத் தீர்மானத்தினை அங்கீகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இதுதொடர்பாக பிரதமர்ரணில்விக்கிரமசிங்காவின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதிலும்,அது தொடர்பான நடவடிக்கைகள் எவையும்மேற்கொள்ளப்படவில்லை என்றும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-08)

## நவராத்திரி பாமாலை (முதலாம் நாள்)



### இன்னல்கள் நீக்கிடுவாய்

துஷ்டரை வதைப்பவளே துர்க்கா தேவியே
தூயவாழ்வை விதைப்பவளே துர்க்கா தேவியே
இஷ்டமுடன் எமக்கு இனிதே அருள்பவளே
இன்பமுடன் நாம்வாழ இன்னல்கள் நீக்குவாயே!

த. அஜந்தகுமார்
நெல்லியடி ம. ம. வித்தியாலயம்.

### நல்வித்தை தா

நவராத்திரியாகும் நன்நாள்களில்
நலங்கள் யாவும் பெற்றிடவே—நாடி
நாங்கள் பணிகின்றோம் நாமகளே
நல்வித்தை தந்துஎமை காத்திடுக.

தி. மயூரகிரி
அ. இ. கல்லூரி
நீர்வேலி.

### கலியுகத்தில் காத்திடுவாய்

துர்க்கா தேவியே துன்பங்கள் களைபவளே
வீரத்தாயே வீணர்களை வதம் புரிபவளே
இத்தினத்தில் உந்தன் பாதத்தை தொழவே
கள்ளமில்லா எம்மனதைக் கலியுகத்தில் காத்திடம்மா.

சி. சிவகுமார்
தேவரையாளி இந்துக் கல்லூரி.

### வீரந்தரும் தேவியே

எம்மின விடுதலைக்கு வீரந்தந்த தாயே
ஆயிரம் கண்களினால் அவலங்கள் தீர்த்தாய்
உன்பாதம் பணிந்தவர்க்கு வீரத்தைத் தந்தாய்
உனக்கொரு கவிதையினை புனைந்து வைத்தேன்.

இ. பிரதாயினி
நல்லூர் ஸ்தானசீ.சீ த. க.

### தேவியர் மூவர்

வேங்அரி வாகனமாய் கொண்டவளே
வீரத்தின் உருவமான துர்க்கையே
செல்வத்தைப் பூண்டிருக்கும் திருமகளே
திருநிறைய அருள்வாய் அம்மையே
வெள்ளைத் தாமரையில் உறைபவளே
வேண்டிடும் கலைகள் தருவாயே.

இ. அசோக்
மு/அம்பலவன் பொக்கணை ம. வி.

## பஸ் சேவை ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

மண்டை தீவுக்கான பேருந்துச் சேவை கடந்த 2ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

யாழ். நகரில்இருந்துமண்டை தீவுக்கான வடபிராந்தியப் போக்குவரத்தின் பேருந்து சேவை தினமும் இருதடவைகள் இடம் பெற்று வருகின்றன.

காலை 9.00 மணிக்குயாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பேருந்து மண்டை தீவிலிருந்து மீண்டும் 10 மணிக்கு யாழ். நகர்நோக்கித் திரும்புவதாகவும் பின்பு மாலை 5மணிக்குயாழ் நகரில் இருந்து புறப்பட்டுச் சென்று மீண்டும் யாழ். நகருக்கு உடனேயே திரும்புகிறது எனவும் தெரியவருகிறது. (க-75)

## குட்டியப்புலத்தில் ஆசிரியர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

குட்டியப்புலம் அ,த.கபாடசாலையின்ஆசிரியர் தினநிகழ்வுகள் கடந்த 5 ஆம் திகதி காலை 9.30 மணியளவில்அதிபர் செ. கந்தசாமி தலைமையில் இடம் பெற்றது.

சிறந்த ஆசிரியர் தெரிவு மாணவர்களின்பேச்சு,கவிதை மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மாறிவரும் சூழலிற்கேற்ப மாணவர்கள்மாறவேண்டியது தவிர்க்க முடியாதது என்றாலும் கூடமனித விழுமியங்கள் பண்பாடு, மனிதநேயம் போன்ற பண்புகளைப்பின்பற்றுவதில் மாணவர்கள்தயக்கம் காட்டக் கூடாது என்றும் அன்றைய கால கற்பித்தல் செயற்பாடுகள் ஆசிரியருக்குரிய மரியாதை செலுத்துதல் மற்றும் ஆசிரியர்களுடைய ஆளுமைப் பண்புகள் இன்று போல் இல்லை என்று பலராலும் குறிப்பிடப்படுவதாகஆசிரியர் தரப்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பலரதும் பாராட்டைப் பெற்றன. (க)

## தனி நபர்களின் பாதுகாப்பு அரசு கவனம் இல்லை

(கொழும்பு)

சட்டம் மற்றும் தனிப்பட்ட நபர்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசு கவனமெடுக்க தவறி விட்டது என பொது ஜனஐக்கிய முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகமதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வில்கம் வெஹர படையினர் கடத்தல் விடயத்தில் கண் காணிப்புக் குழுவினராலும் எதுவும் செய்ய முடியவில்லை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படையினரை விடுதலை செய்யுமாறு விடுத்த வேண்டுகோளிற்கும் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இப்போது மெதிரிய தாக்குதல் தொடர்பாகவும் விசாசணை மேற்கொள்ளுமாறு பிரதமர் பணித்துள்ளார் ஆனால் அவர் குறிப்பிட்ட 48 மணித்தியாலத்திற்குள் எந்த விதமான அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை:

இவற்றை சுட்டிக்காட்டியே சரத் அமுனுகம மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

(க-07)

## விசேட திட்டம்

கிராமப் புறங்களில் மரமுந்திரிகை பயிர்செய்கையை அபிவிருத்தி செய்ய மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் விசேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

வறிய குடும்பங்களிற்கு சுயதொழிலைஏற்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இந்த திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்களிற்கு இலவச மரமுந்திரிகைக் கன்றுகளை வழங்குவதுடன்,மானிய உதவிகளையும் வழங்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிய வருகின்றது. (க-10)

## போலிக் காசோலை வழங்கிய நபர் கைது

(கொழும்பு)

போலிக்காசோலைகளை வழங்கி பல வருடங்களாக வர்த்தக முயற்சியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை மாத்தளைப் பொலிஸார் கொழும்பில் வைத்து கைது செய்துள்ளனர்.

பல கோடி ரூபாவுக்கு இவர் போலிக்காசோலைகளை வழங்கிவந்தார் என்ற குற்றச்சாட்டுக்களை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (க-8)

## இலங்கையின் அபிவிருத்தி ஜப்பானில் கூட்டம்

### அமைச்சர் பீரீஸுக்கும் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை புனர்நிர்மாணம், அபிவிருத்தி மற்றும் அதற்கான நிதியுதவி குறித்து ஆராயும் கூட்டத்தை, ஜப்பான் அரசு தனது நாட்டின் தலைநகரான ரோக்கியோவில் நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

இவ் விருப்பம் பற்றி, ஜப்பானின் வெளிநாட்டமைச்சர் ஜொரி ஹொக்காவோச் இலங்கையின் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸுக்கு தெரிவித்துள்ளார்.

அரசபிரதிநிதியாக ஜப்பனுக்குச் சென்றுள்ள அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், அங்கு வெளி விவகார அமைச்சரை சந்தித்து பேசியுள்ளார்,

அத்துடன் அந் நாட்டின் பல முக்கிய தலைவர்களையும் சந்தித்து அமைச்சர் இலங்கையின் புனர்நிர்மாணத்துக்குரிய உதவிகள் குறித்து ஆராயவுள்ளார்.

(இ)

## க. பொ. த(சா/த)பரீட்சை டிசம்பர் மாதம் 2இல்

(கொழும்பு)

இந்த வருடம் நடைபெறவிருக்கும் க.பொ.த (சா/த) பரீட்சை டிசம்பர் மாதம் 2 ஆம்திகதி முதல் 13 ஆம் திகதி வரைநடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகளுடன் பாடசாலை மட்ட மாணவர் மதிப்பீடுகளும் வெளியிடப்படுமெனவும் இம் மாணவர்களின் மதிப்பீடுகள் தொடர்பான தகவல்களை வலயக்கல்விப் பணிமனைகள் பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

வினாத்தாள்கள் அச்சிடும் பணிகள் உள்ளிட்ட ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும்இவ் வருடம் க.பொ.த(சா/த) பரீட்சைக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம்பரீட்சார்த்திகள் பங்கு கொள்ள உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-7)

## அரசு-புலிகள் பேச்சு விபரம் அவசியம் வேண்டும்

### எதிர்க்கட்சிக் கொரடா கோரிக்கை

(கொழும்பு)

அரசு- புலிகளின் முதற் சுற்று தாய்லாந்து பேச்சுவார்த்தை மற்றும் வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைவரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை கோரவுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதான கொரடாவும் மாத்தறை மாவட்ட எம்பியுமான மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

நடைபெற விருக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்விடயத்தை முன்வைக்கவுள்ளதாக குறிப்பிட்ட அவர் இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்னர் இவ்விவாதம் நடைபெறவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்தமாதம் நடைபெற இருக்கும் வரவு செலவு திட்ட விவாதம் நடைபெறுவதற்கு முன்னர் மேற்படி விவாதத்திற்கான நாள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அத்துடன் சமாதானப் பேச்சுக்கள் அது பற்றிய விபரங்கலள பாராளுமன்றத்தில் அறிக்கை மூலம் சமர்பிக்க வேண்டும் எனவும் அரசாங்கத்தை கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-7)

# ஈராக் பிரச்சினை குறித்து
# ஐ.நா சபையில் தீர்மானம்

(வியன்னா)

ஈராக் மீதான நடவடிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் தீவிர இராஜதந்திர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


ஈராக் பிரச்சினை குறித்து, புதிய தீர்மானம் எதுவும் தேவையில்லை என்று சீன மறறும ரஷ்ய நாடுகள் கூறி வருகின்ற நிலையில், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் ஈராக்கின் மீதான கடுமையான தீர்மானத்தைக் கொண்டுவர முயறசிகள் மேற்கொண்டு வருகின்றன.

ஆனால் ஒரு தீர்மானத்திற்குப் பதிலாக இரண்டு தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று பிரான்ஸ் வெளியிட்டிருக்கின்ற பரிந்துரையினை, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் ஏற்கக்கூடும் என நம்பப்படுகிறது.

ஆயுதக் கண்காணிப்பாளர்களை ஈராக்கிற்கு அனுப்ப வழிவகுக்கும் வகையில்முதல் தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்றும், அவ்வாறு அங்கு அனுப்பப்பட்ட ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு ஈராக் ஒத்துழைக்கா விட்டால், படை நடவடிக்கை எடுப்பது குறித்து மற்றொரு தீர்மானத்தைப் பின்னர் நிறைவேற்றலாம் என்றும் பிரான்ஸ் பரிந்துரை செய்திருக்கிறது.

இதனிடையில் ஈராக் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடாத்திய ஆயுதப்பரிசோதனைக் குழுவின் தலைவர் பிலிகஸ அப் பேச்சுவார்த்தை குறித்த விபரங்களை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் பகிர்ந்து கொண்டார்.

ஈராக் பிரச்சினை தொடர்பாகப் புதிய தீர்மானத்தைக் கொண்டுவர அமெரிக்காவும், பிரித்தானியாவும் முயற்சி செய்து வருகின்ற நிலையில், உடனடியாக ஈராக்கிற்கு செல்வது சாத்தியமல்ல என்று பிலிக்ஸ் மேலும் தெரிவித்தார். (சு)



ஜேர்மனி ஒன்றுபட்டு ஓராண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு பொலின் நகரில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிக்காக ரிச்ஸ்ட் கட்டிடம் பிரமாண்டமாக அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பான் கடலில் இரசாயன பொருட்கள கலக்கும் அபாயம்

(டோக்கியோ)

ஜப்பான் கடற் பகுதியில் இரசாயனப பொருள்கள் ஏற்றி வந்த கப்பல் ஒன்றும், கண்டைனர் கப்பல் ஒன்றும் எதிர் எதிரே மோதிக்கொண்டதில், இரசாயனப் பொருள் ஏற்றிவந்த கப்பல் கடலில் மூழ்கியது.

இதையடுத்து, கடற் பகுதியில் இரசாயனப் பொருள்கள் பரவி சுற்றுப்புறச் சூழல் மாசுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை அறிந்தவுடன், கப்பல் மீட்புப் பணியாளர்கள் அவ்விடத்திற்கு விரைந்து 4 மாலுமிகளை உயிருடன் மீட்டுள்ளனர்.

மேலும், இக்கடலில் பரவியுள்ள இரசாயன திரவப் படலத்தை அகற்றுவது சுலபமான காரியமல்ல எனக் கப்பல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சு)

# தேர்தலுக்குப்பின் பிரதமருக்கு
# முழு அதிகாரமும் வழங்கப்படும்

### பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரப் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

தேர்தலுக்குப் பிறகு புதிய பிரதமருக்கு முழு அதிகாரமும் வழங்கப் போவதாக பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரட் அறிவித்துள்ளார்.

வரும் 10ஆம் திகதி பாகிஸ்தானில் நடைபெற இருக்கும் தேர்தலையொட்டி, நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அரசியலில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தமது கடமையாகும் என்றும்,

தேர்தலுக்குப் பிறகு ஆட்சி நடத்தும் பொறுப்பைத் தாம் ஏற்கப் போவதில்லை எனவும்,

புதிய பிரதமருக்கு முழு அதிகாரத்தையும் வழங்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் அரசு, கடந்த மூன்றாண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதைப் போன்று தொடர்ந்தும் நல்லாட்சி நடத்த வேண்டும் எனவும்,

கடந்த 10 ஆண்டுகளாக அரசியலில் இடம்பெற்ற ஊழல், மோசடி போன்றவற்றை அகற்றி இனிப் பொறுப்பேற்கும் அரசு, புதிய கலாசாரத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (சு)

# பிரி. உழைப்பாளிக் கட்சித் தலைவரின்மரணதண்டனைரத்து

(அங்காரா)

பிரிட்டிஷ் உழைப்பாளிக் கட்சித் தலைவர் அப்துல்லா ஒஷாலானின் மரண தண்டனையைத் துருக்கியின் தேசிய பாதுகாப்பு நீதிமன்றம் இரத்துச் செய்துள்ளது.

பிரிட்டிஷ உழைப்பாளிக் கட்சித் தலைவரான ஒஷாலான் துருக்கி அரசிற்கு எதிராக 16வருடங்கள் போராடி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1999ஆம் ஆண்டு துருக்கி அரசால் கென்யாவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவருக்கு துருக்கி நீதி மன்றம், மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் வகையில் தனது சட்டங்களில் மனித உரிமைகள் தொடர்பான அம்சங்களை புகுத்தி வருகின்ற துருக்கி ஒஷாலானின் மரணதண்டனையை நீக்கி ஆயுள் தண்டனையை வழங்கியுள்ளதாக துருக்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சு-4)

# தென்கொரிய நீதிபதி
# பிரதமராகத் தெரிவு

(சியோல்)

தென்கொரியாவின் பிரதமராக அந்நாட்டு உயர் நிதிமன்ற நீதிபதியான ஹிம்சுங்கோ பாராளுமன்றத்தினால்வாக்கு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அந்நாட்டு ஜனாதிபதியினால் பிரதமர் பதவிக்கு பிரேரிக்கப்பட்ட 3ஆவது நபரே இவராவர்.

ஹிம்சுங்ரோவை பிரதமராக தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக 210 வாக்குகளும், எதிராக 31வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கு முன்னர் ஜனாதிபதியினால் பிரேரிக்கப்பட்ட இருவரது பெயர்களும் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டன. (சு-04)

WORLD NEWS உலக தரிசனம்

# அமெரிக்கத் தூதரக இடமாற்றத்தை
# கண்டித்து காஸாவில் போராட்டம்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலேமிற்கு மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று முன்தினம் பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் போராட்டம் நடத்தப்பட்டது.

இதுவரை இஸ்ரேலின் தலைநகரமான ரெல் அவிவில் செயற்பட்டு வந்த அமெரிக்க தூதரகத்தை ஜெருசலேமிற்கு மாற்றுவதற்கு அண்மையில் அமெரிக்காவின் காங்கிரஸ் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அத்தோடு இத்திட்டத்தை அனுமதித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் புஷ்ஷும் கையெழுத்திட்டார்.

அமெரிக்காவின் இச்செயல் பலஸ்தீனர் மத்தியில் கடும் விமர்சனத்தை எழுப்பியுள்ளது.

கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்டு பலஸ்தீன நாடு அமைப்பதற்கு அந்தப் பகுதி அமைப்புகள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், ஜெருசலேம் முழுவதும் தமக்கே சொந்தமானது என்று இஸ்ரேல் கூறி வருகிறது.

ஜெருசலேம் நிலை குறித்து பொதுவான நிலைப்பாட்டையே கொண்டு வருவதாக அந்த நாடு விளக்கமளித்தாலும், பலஸ்தீன அமைப்புகள் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என கூறுகின்றன.

நேற்று அமெரிக்கத் தூதரகத்திற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் யசீர் அரபாத்தின் பாட்டா இயக்கம், கமாஸ் அமைப்பு உட்பட பல பலஸ்தீன அமைப்புக்கள் இணைந்து கொண்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)


## ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத்தில் முன்னேற்றம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத் துறையை கட்டியெழுப்புவதறகுத் தேவையான உதவிகள் தாராளமாகக் கிடைத்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி கூறியுள்ளது.

இந்த நாட்டின் பொருளாதாரத் துறை அடுத்த 5வருடங்களில் சீரடைந்து விடும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசியாவிற்கான பணிப்பாளர் நாயகம் ஜொய்சிக்றோ இவாஷாக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் ஆப்கானிஸ்தானுக்கு 15பில்லியன் அமெரிக்க டொலர் வழங்கியுள்ளதாக தெரிவித்த ஜொய்சிக்றோ 1998ஆம் ஆண்டு அந்நாட்டில் எந்தளவிற்கு உற்பத்தி இருந்ததோ அதேயளவுக்கு மீண்டும் உற்பத்தியைக் கொண்டுவர 04.7பில்லியன் டொலர் வழங்க உறுதியளித்துள்ளதாகவும் இணங்கியுள்ளார். (சு-4)



பிரபஞ்சத்திலுள்ள நட்சத்திரத் தொகுதிகள் பலவற்றில் பாரிய கறுப்புக் குழிகளும், அவற்றின் நடுவில் வாயுவும் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். அப்பல் எனப்படும் இந்த நட்சத்திரத் தொகுதியில் சந்திரா X கதிர் கண்காணிப்பு பிம்பத்தையும், இதிலிருந்து வாயு வெளியேறுவதையும் படத்தில் காண்கின்றீர்கள். இவ்விம்பத்தின் நடுவில் சூடான வாயுவும் சுற்றி தூசியுடன் சேர்ந்த வாயுவும் காணப்படுகிறது.

# தற்காலிக நிறைவேற்று அதிகாரத்தை
# பெற்றுள்ளார் நேபாளமன்னர் ஞானேந்திரா

(காட்மண்டு)

நேபாள மன்னர் ஞானேந்திரா தனது பிரதமரையும், அமைச்சரவை அங்கத்தவர்களையும் பதவி நீக்கம் செய்து தற்காலிகமாக நிறைவேற்று அதிகாரங்களைப் பொறுப்பேற்றுள்ளார்.

பாராளுமன்றத்தில் நவம்பர் மாதம் நடைபெறவிருந்த தேர்தலை கால வரையறையின்றி பிற்போட்டுள்ளதுடன், மக்கள் மூலம் தெரிவு செய்யப்படாத பிரதி நிதிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கத்தை அமைக்கப் போவதாகவும், அவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது எனவும் நேபாள மன்னர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசியல் யாப்பு ரீதியான மன்னராடசி, பல கட்சிகளைக கொண்ட ஜனநாயகம் போன்ற விடயங்களில் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாகவும் மன்னர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் செர்ப.்.துர்டியூபா நவம்பர் மாதம் நடைபெறவிருந்த தேர்தல் ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தவறியதையடுத்தே, மேற்படி அறிவித்தலை மன்னர் வெளியிட்டுள்ளார்.


மாவோ கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நடத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாக தேர்தலை ஒரு வருடத்திற்குப் பிற்போடுமாறு பிரதமர் டியூபா மன்னரிடம் கேட்டிருந்ததாகவும், தமது பதவி நீக்கத்தின் பின்னர் உரையாற்றிய அவர், மன்னரின் முடிவு அதிர்ச்சி தருவதாகவும், பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பு ரீதியான முடியாட்சியைக் கவிழ்க்கப் போராடும் மாவோ கிளர்ச்சியாளர்கள் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமையைக் கண்டித்துள்ளனர்.

எனினும், கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரமபிப்பதே தற்போதைய பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கக் கூடிய வழி என்றும் மாவோ ஹம்மிஸ் கட்சியின் தலைவர் பிரசாந்தா மன்னருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (சு-4)

## உலக சாதனை





தென்கொரியாவின் பூசான் நகரத்தில் இடம்பெற்று வரும் 14ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் நீச்சல் போட்டியிலும், பளுதூக்கும் போட்டியிலும் புதிய உலக சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

நீச்சல் போட்டியில் ஆண்கள் பிரிவில 200மீற்றர் பின்புறமாக நீந்தும போட்டியில் ஜப்பானைச்சேர்ந்த கொசுகே கிடாஜ்மன் 2நிமிடம் 09.97வினாடிகளில் நீந்தி முடித்துத் தங்கப்பதக்கம் பெற்றுக் கொண்டார்.

அதே நேரம் சீனாவைச் சேர்ந்த லீ மோஷெங கிளீன் எண்ட் ஜேர்க்பிரிவு பளு தூக்கும் போட்டியில் ஆண்களுக்கான 62கி.கிராம் பிரிவில் மொத்தமாக 322.5கி.கிராம் பளுவைத் தூக்கி உலக சாதனை படைத்துள்ளதுடன், இதில் தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளார். (சு)

# இன்று ஒரு தகவல்

## குடிநீரினால் மாறியவன்

அந்த நாட்டில் பரசு என்றால் தெரியாதவர்களே இல்லை. அவன் பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரன் ஆனால் அவன் பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஏழைகளுக்குக் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தான். அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இருபத்தையாயிரம் ரூபாய் பரிசு தருவதாக அரசாங்கம் அறிவித்தது. அவன் ஒருநாள் காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது வெப்ப மிகுதியால் நீர் வேட்கை மிகுந்தது. எங்கும்நீர் காணப்படவில்லை. அந்த நிலையில் அவன் ஓர் இடத்தில் ஒரு மேடையையும் அதில் ஒரு சிவலிங்கத்தையும் பார்த்தான்.

அந்தச் சமயம் ஒரு கிழவி அந்த மேடைக்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய கைகளில் தின்பண்டங்களுடன் கூடிய ஒரு கூடையும், நீர் நிறைந்த பாத்திரமும் இருந்தன. பரசு ஆவலுடன் அவளருகில் வந்தான். 'தாயே நீயார்? எங்கிருந்து வருகிறாய்? எதற்கு வந்தாய்?' என்று வினவினான். கிழவிக்குத் துக்கத்தினால் அழுகை வந்தது. பரசு இன்மொழிகளால் அவளைச் சமாதானப் படுத்தினான்.

கிழவி கூறினாள்- 'அப்பா, நான பக்கத்திலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவள். இடையர் குலத்தில் பிறந்தவள். எனக்கு உன்னைப்போல் ஒரு மகனும் மருமகளும் இருந்தனர். சென்ற ஆண்டு ஏற்பட்ட கொள்ளை நோயில் இருவரும் இறந்துவிட்டனர். ஒரு பெண் குழந்தையை என் பொறுப்பில் விட்டுப் போய் விட்டனர். என் மகன்தான் இந்த மேடையைக் கட்டினான். ஒரு சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து தினமும் தவறாது பூஜைசெய்து வந்தான். அவன் இறந்தபின் அவன் ஆசையுடனும் பக்தியுடனும் செய்துவந்த பூஜையை நான் செய்து வருகின்றேன், தினம் தண்ணீரும், தின்பண்டங்களும் எடுத்து வருகின்றேன். சிவபிரானுக்கு நீரால் அபிஷேகம் செய்து, தின்பண்டங்களைப்படைப்பேன்பிறகு மகனை நினைத்து அழுதுவிட்டுச் செல்வேன். அடுத்தமாதம் என்பேத்தி சம்பாதேவிக்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருக்கிறேன், ஆனால் கையில் ஒரு காசும் இல்லாத நான் என்ன செய்வேன்? சிவபிரானைத் தினம் அழுது வேண்டுகிறேன் அந்த ஆண்டவன் தான் உதவவேண்டும்' என்று அரற்றினாள்,

அம்மா, தாகத்தினால் தவிக்கும எனக்கு அந்தத் தண்ணீரைத் தருவாயா?' என்று கேட்டான் பரசு, குழந்தாய், தருகிறேன் குடி அப்பா! குந்தா, முதலில் தின்பண்டங்களைப் புசி, தண்ணீரைக் குடி நான் ஆண்டவனுக்கு அர்ப்பணித்ததாகவே கருதுகின்றேன என்றாள் கிழவி பரசு தின்பண்டங்களைத் தின்று நீரைக்குடித்தான், தாகமும் களைப்பும தீர்ந்ததும், சம்பா தேவியின் திருமணம் பற்றி விசாரித்தான். தான் கொள்ளைக்காரன் பரசு என்பதையும் கூறினான்.

பாட்டி, உன்பேத்தியின் திருமணம் பிரமாதமாக நடைபெறும். பணத்தைப்பற்றி நீ கவலைப்படாதே. இதோ அமர்ந்திருக்கும் சிவபெருமான் நடத்திவைப்பார் 'திருமணநாளன்று நான் நேரில் வந்து ஐந்து நிமிஷம் இருந்து மணமக்களை வாழ்த்திவிட்டுப் போவேன் கவலைப்படாமல் சென்றுவா' என்று கூறிப் பரசு மறைந்தான். சூதுவாது அறியாதவள் கிழவி. தன் மகன் பூஜித்த சிவலிங்கத்தின் மகிமையால் பரசுவைப்பார்த்ததும், அவன் உதவி செய்வதாக வாக்களித்ததும் அவளைக் கிளர்ச்சியுறச் செய்து விட்டன. அந்த ஆனந்தத்தில் அவள் ஊரில் எல்லோரிடமும் எல்லா விவரங்களையும் கூறிக் கூறி மகிழ்ந்தாள். இந்தச் செய்தியைக் கேட்ட கிராமத்து மணியகாரன் உடனே மேல் அதிகாரிகளுக்குச் செய்தியை விரிவாகச் சொல்லியனுப்பினான்.

திருமணத்திற்கு மூன்று நாட்கள் இருந்தன. கிழவியின் வீட்டெதிரில் ஐந்து வண்டிகள் வந்து நின்றன. அவற்றில் சமையலுக்கு வேண்டிய தானியங்களும், சர்க்கரை, காய்கறிகளும், ஆடை, அணிகள், பாத்திரங்கள்; தின்பண்டங்கள் முதலியவைகளும் நிறைந்து இருந்தன. சாமான்களை வண்டிக்காரர்கள் கிழவியின் வீட்டில் இறக்கி வைத்தனர். கிழவிக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் கலந்த ஆவல், அப்பா இதெல்லாம் யார் அனுப்பியது என்று வினவினாள்.

'நாங்கள் வாடகை வண்டிக்காரர்கள்; எங்களுக்கு வாடகை முழுவதையும் கொடுத்து உங்கள் வீட்டில் இறக்கி வைக்கும்படி உத்தரவு, யார் என்று எங்களுக்குத் தெரியாது' என்று வண்டிக்காரர்கள் விடையளித்தனர். ஊர் மணியகாரனுக்கு இது பரசுவின் வேலை என்பது புரிந்தது. அவன் உடனடியாக அதிகாரிகளுக்கு அறிவித்தான். திருமணத்திற்கு முதல் நாள், ஓர் அதிகாரியின் தலைமையில் முப்பது இராணுவ வீரர்கள் வியாபாரிகளின் வேஷத்தில் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

திருமண நாள் பரசுவின் நண்பர்கள் அவனைத் தடுத்தார்கள்; அவன் திருமணத்தில் கலந்து கொள்வதால் ஏற்படக் கூடிய அபாயத்தைக் கூறி எச்சரித்தார்கள். ஆனால் பரசுவோ 'ஒரு பாத்திரம் நீரைக் குடித்து கிழவிக்குக் கடனாளியாகி விட்டேன். அந்தக் கடனை நான் வாக்களித்தபடி சென்று தீர்த்தேயாக வேண்டும்' என்று கூறி, குதிரை மீது ஏறித் திருமண வீட்டையடைந்தான், சம்பாதேவியின் வீட்டிற்குள் நுழைந்தான். வாக்களித்தபடி மணமகளின் கைகளில் ஐந்து சவரன்களுடன், சம்பா தேவியை மணமகனின் கைகளில் பிடித்துக் கொடுத்தான். ஒருவரிடமும் பேசாமல் வெளியேறினான். தன்குதிரை மீது ஏறிப்பறந்தான். மாறுவேஷத்திலிருந்த இராணுவ அதிகாரியும், வீரர்களும் அவனைத் தொடர்ந்தனர்.

இராணுவத்தினருக்கும் பரசுவின் கூட்டத்தினருக்குமிடையே பலத்த சண்டை தொடங்கியது. பரசு சண்டையில் ஓர் ஆழமான கால்வாயில் விழுந்து விட்டான், ஆயினும் குறிதவறாமல் சுட்டு ஒன்பது வீரர்களைக் கொன்று விட்டான். பரசுவின் வீரமும் நேர்மையும் இராணுவ அதிகாரியின் மனதைக் கவர்ந்து விட்டன. 'பரசு நீ ஒரு வீரன். சொல் தவறாத உத்தமன். இனிக் கொள்ளையடிப்பதில்லையென்று ஆணையிட்டுச் சொன்னால், நான் அரசனிடம் கூறி, மன்றாடி உனக்கு விடுதலை வாங்கித் தருகின்றேன். நீயும் சொல் தவறாத வீரன், நானும் சொல் தவறாத வீரன். இன்றிலிருந்து நீ எங்களின் உண்மைத்தோழன் ஆவாய்' என்று இராணுவ அதிகாரி

(6ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு - களுத்துறை

# சிறைகைதிகளுக்கு ஆதரவுதெரிவித்து அமிர்தகழியில் உண்ணா நோன்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, களுத்துறை வெலிக்கடைச்சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று மட்டக்களப்பு அமர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வர ஆலய முன்றலில்ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் சிறைக் கைதிகளின் பெற்றோர்கள், மற்றும் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, தம்மை விடுதலைசெய்யக் கோரி நேற்று ஆறாவது நாளாகவும் உண்ணாவிரதம் இருந்துவரும் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று முன் தினம் கைதிகளின் பெற்றோர் அமைப்பும் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தைமேற்கொண்டிருந்தது தெரிந்ததே.

(க-08)

## மரநடுகை தினம்

(கொழும்பு)

இவ்வாண்டின் மரநடுகை தினத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி அனுட்டிப்பதற்கு சுற்றாடல் இயற்கைவள அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவேமர நடுகைதினம் ஒக்டோபர் 20ஆம் திகதி அனுட்டிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் பருவ மழை அதற்கு முன்பே பெய்வதால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சுற்றாடல் இயற்கைவள அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(க-03)

## இராசி பலன்

7-10-2002
(புரட்டாதி 21, திங்கள்)
பிரதமை பி. ப. 3.21 வரை
சித்திரை ந. இ: 11.46 வரை
இராகுகாலம்-7.32-9.02
நல்லநேரம்-12.02-1.32
நவராத்திரி விரதாரம்பம்

**மேடம்**
சென்றஇடத்தில் செல்வாக்கு, நண்பர்கள்சந்திப்பு, பொருள்சேர்க்கை, காரிய நன்மை

**இடபம்**
சந்தோசமான நிகழ்வு, முயற்சிபலிதம், தேகநலன், பகைவர்நேசம்

**மிதுனம்**
புத்திரரால் கவலை, எதிர்பாராதநன்மை, செய்தொழில் விருத்தி, சிறுவியாதி

**கடகம்**
கல்வியில்ஆர்வம், கடுமையான வார்த்தை, காரியதாமதம், சகோதரர் உதவி

**சிங்கம்**
போசனசுகம், அன்னியர் சந்திப்பு, காரியநன்மை, சுவாரஸ்யம்

**கன்னி**
உஷ்ணரோகம், வீண் வார்த்தை, சயன சுகக் குறைவு, முயற்சிதாமதம்

**துலாம்**
காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, உறவினர்வருகை, நல்லமுயற்சி

**விருச்சிகம்**
உணர்ச்சிவசப்படல் செய்தொழில்நன்மை, பிரயாணக் கஷ்டம், முயற்சிதாமதம்

**தனுசு**
எடுத்தகாரியம் கைகூடும், நிலைமாற்றம், நல்ல வரவேற்பு, தனலாபம்,

**மகரம்**
கடுமையான முயற்சி, நல்லசம்பவம், பிறர்உதவி, அதிகாரம்

**கும்பம்**
பிரயாணம், மனக்கட்டுப்பாடு, தர்மம், தொழில்சிந்தை

**மீனம்**
திருடர்பயம், கடன் தொல்லை, காரியதடங்கல், போசனசுகம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## சமாதான முயற்சிகளில் அரசியல் அணுகுமுறை யப்பான் பாராட்டு

(கொழும்பு)

இருதசாப்தங்களாக நடைபெற்று வந்த போரினை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் அரசியல் மட்டத்தில் மேற் கொள்ளப்பட்டுவரும் அணுகுமுறை குறித்து யப்பான் பாராட்டியுள்ளது.

யப்பானின் வெளிநாட்டு அமைச்சர் திருமதி ஹாவாடுச்சியை அரசியலமைப்பு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கடந்த வெள்ளிக்கிழமையன்று டோக்கியோ நகரில் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு பாராட்டியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் வெற்றியடையதேவையான பொருள் மற்றும் நிதி உதவிகளை செய்வதற்கு யப்பான் தயாராகவுள்ளது எனவும்,

தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்றுமுடிந்த முதலாவது சுற்றுப்பேச்சு வார்த்தையின் போது வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மனித நேய மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு கூட்டு வழிமுறை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள பேச்சு வார்த்தைகளின்போது இரு தரப்பினருக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டமை குறித்தும் தான் வரவேற்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

(க-8)

## பலாங்கொடையில் பாரிய மண் சரிவு போக்குவரத்து தடை

(கொழும்பு)

பலாங்கொடையில் வோக்ககவெல பகுதியில் நேற்று பாரிய மண்சரிவு ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை முன் தினம்இடம் பெற்றமண்சரிவு காரணமாக அந்தப் பகுதியில் உள்ள சில வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவு காரணமாக வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் நான்கு பேர் காணாமல் போயிருப்பதாகவும் தெரிய வருகிறது.

(க-05)

## மாத்தறை சிறைக்கைதிகள் மாரடைப்பால் மரணம்

(கொழும்பு)

மாத்தறை சிறைச்சாலைக் கைதிகள் மூவர் கடந்தவாரம் மாரடைப்பால் மரணமாகியுள்ளனர்.

மொறவக்கயைச் சேர்ந்த சு. மருதன் (52 வயது) அம்பாறையைச் சேர்ந்த கே.எம். குணசேகர (வயது 58) நிக்கவெரட்டிய இடத்தை சேர்ந்த டீ. எம். ஜயசேகர ஆகிய கைதிகளே இவ்வாறு மரணமானவர்களாவர்.

இம் மூவரும் கடந்த வாரம் கடும் சுகவீனமுற்று மாத்தறை அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சொற்ப நேரத்தில் மாரடைப்பால் மரணமானார்கள்.

மாத்தறை நீதிவான் இவர்களது மரண விசாரணைகளை மேற்கொண்டு மாரடைப்பால் மரணம்எனதீர்ப்பு வழங்கினார்.

(உ-7)

## பிறப்பு, இறப்பு, திருமண பதிவாளர் நியமன விதிமுறைகளில் மாற்றம்

(கொழும்பு)

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவாளர் நியமனங்கள் வழங்கும் விதிமுறைகளில் உடன் அமுலுக்கு வரும் வகையில் சில மாற்றங்களை கொண்டுவர மாகாண சபைகள், பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சர் அலுக் அலுவிகார தீர்மானித்துள்ளார்.

அதன்படி இந்நியமனங்கள் வழங்கப்படும்போது வாய்மூல மற்றும் எழுத்துமூல பரீட்சைகளை நடாத்தி தகுதியுடையவர்களை தெரிவுசெய்யுமாறு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இம்மாற்றங்களுக்கமைய இவர்களது சேவைக்கால வயதெல்லை 65 ஆகக்குறைக்கப்படவுள்ளது.

இதேவேளை வடக்கு கிழக்கு உட்பட அனைத்து மாகாணங்களிலும் 5 வருடத்துக்குமேல் பதில் பதிவாளராக கடமையாற்றுபவர்களுள் உரிய தகைமை உடையவர்களை தெரிவுசெய்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

(உ-8)

# வட-கிழக்கில் விரைவில் அபிவிருத்தி உதவிவழங்க வெளிநாடுகள் தயார்

## - பிரதி நிதிஅமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு -

(கொழும்பு)

**இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகள் துரித கதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன இம் முயற்சியில் வெளிநாடுகளின் பொருளியல் நிபுணர்கள், வர்த்தக பெரும் புள்ளிகள் உதவ முன்வந்துள்ளதாகவும், அரசாங்கங்கள் பலவும் இது விடயத்தில் ஆர்வம் காட்டி வருவதாகவும் பிரதி நிதிஅமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் முக்கிய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட வேளையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலானசமாதான முயற்சியின் முன்னெடுப்பாகவே அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் இடம்பெற்ற முதலாம் கட்ட பேச்சுவார்த்தைகள், அதனைத் தொடர்ந்துஏற்பட்ட முயற்சிகள் நிச்சயம் நல்ல ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 2003 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கை நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு அமைச்சுக்குமான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் மூலதன செலவுகளுக்காக பாராளுமன்றின் அனுமதியை பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே இத்திட்ட அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நகல் சட்ட மூலம் நிதியமைச்சர் கே.என். சொக்ஸியினால் பாராளுமன்றில்சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கையில் சுமை ஏற்படாதவாறு புதிய வரிமுறை அமுல்படுத்துவது குறித்து அரசாங்கம் அக்கறை காட்டி வருகின்றது என்றார்.

(க-8)

## புனரமைக்கப்படாத வீதிகள்

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவில் பல வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது.

புங்குடுதீவில் உள்ள குறிகட்டுவான் துறைமுகத்திற்குச் செல்லும் வீதியைத்தவிர வேறு எவ்வீதியும பலவருடங்களாக புனரமைக்கப்படவில்லை.

இதனால் புங்குடுதீவில் வசிக்கின்ற பெருமளவு மக்கள் போக்குவரத்தில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள் எனத் தெரிவிககப்படுகின்றது.

இவ்விடயங்குறித்து சம்பந்தப்பட்டவர்கள விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-75)

## எதிர்க்கட்சித் தலைவரின் தலைமையில் கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தனியார் மய மாக்கல் நடவடிக்கைகளிலிருந்து பொதுச் சொத்துக்களையும், தொழிலாளர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஐக்கிய கூட்டணியொன்று கடந்த 4ம் திகதி கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவரின் இல்லத்தில் நடை பெற்ற கூட்டமொன்றில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், தொழிற்சங்கங்களின் தலைவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விமல் வீரவன்ச, திஸ்ஸ விதாரண, சம்பிகா ரணவாக்க, சோமவீர சந்திரசிறி ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி கொழும்பு மக்கள் வங்கி தலைமையலுவலகத்திற்கு முன்னால் மதியம் 12.00 மணிக்கு எதிர்ப்புப் போராட்டமொன்றைநடத்துவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது செய்தி ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிக்கையில், அரசாங்கம் மக்கள் வங்கி, மின்சாரம், போக்குவரத்து, காப்புறுதி, கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்ஆகியவற்றை போலிக் காரணங்களைக் காட்டி தனியார் மயமாக்கி வருகிறது இதனை எதிர்த்து தடுத்து நிறுத்துவதற்கு சகல முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைய வேண்டும். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள போதிலும், அரசு எந்த வித நிவாரணமும் வழங்க முன்வரவில்லை என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(ச-ம)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

(ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை சிறுவர் முதியோர் தினநிகழ்வுகள் இடம்பெறவுமுள்ளன.

மேற்படி பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 10.00 மணிமுதல் சிறுவர் முதியோர்தின நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

(க-75)

## வீடுகள் அமைக்கப்படும்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர்பிரிவில்உள்ள பருத்தியடைப்பு கிராம அலுவலர் பிரிவில் யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தினால் 30 தற்காலிக வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஏ-9 கண்டிவீதி திறக்கப்பட்டபின் மேற்படி கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வீட்டு வசதியினை வழங்கும்முகமாக இத் தற்காலிக வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை மேற்படி கிராமத்தில் ஒருபொதுக் கிணறும், ஒரு பொது மலசல கூடமும் அமைக்கப்படவுள்ளது.

(க75)

## அலுவலகம் திறக்கப்படும்

(ஊர்காவற்றுறை)

கிளிநொச்சியில் உலகஉணவுத் திட்டத்தின் அலுவலகம் ஒன்று விரைவில் திறக்கப்படவுள்ளதாகஉலகஉணவுத்திட்ட வெளிக்கள இணைப்பாளர் வினோத் ஆச்சாரிய தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர்பிரிவில் உள்ளசுருவில் குளம் புனரமைப்பு செய்வதற்கான ஆரம்ப வேலையினை கடந்த 4ம் திகதி காலை 11 மணிக்கு ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(க-75)

## தெருக் கூத்து

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு மீளக் குடியேறிய பிரதேசமான மாமுனை முதல் கட்டைக்காடு வரையிலான பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால், கண்ணிவெடிகளால் ஏற்படும் விளைவுகளை விளக்கி பாடசாலை தோறும் தெருக்கூத்துகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தெருக் கூத்தினை மாணவர்களும், பெற்றோரும் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

(க-42)

## உள நோய்களை

யில் தேசிங்கு மன்னன் தான் அதை அடக்கினானாம். நம் ஒவ்வொருவருடைய உள்ளமும் அந்தப் பராசாரிக் குதிரையைப் போன்றதே ஆகும். நம்மாலேயே அடக்க முடியாத அளவுக்கு அது முரட்டுத்தனம் படைத்தது

எந்தக் குதிரையும், அது எவ்வளவு தான் முரட்டுக் குதிரையாய் இருந்தாலும், அதன் மீது ஆள் ஏறி உட்காரும் போது தான் துள்ளிக் குதிக்குமே தவிர, ஆள் கீழே இறங்கி விட்டால் அது துள்ளிக் குதிக்காது. நம்மனமும் இப்படித்தான். நாம் ஏதாவது ஒன்றைப்பற்றி எண்ணும்போது, அல்லது சிந்திக்கும் போது, மனம் என்னும் பராசாரிக் குதிரை மீது நாம் ஏறி உடகாந்து சவாரி செய்கிறவர்கள் ஆகிறோம். அப்படிச்சவாரி செய்கையில் அது காட்டுக்கும், மேட்டுக்கும் தலைதெறிக்க ஓடுகிறது. கண் மண் தெரியாமல் துள்ளிக் குதிக்கிறது.

அவ்வாறு துள்ளிக் குதிக்கும் போது, நாம் எதைப்பற்றியும் எண்ணாமல் எதைப் பற்றியும் சிந்தனையிலும் ஈடுபடாமல், மனத்தை மௌனமாக வைத்துக் கொண்டு சும்மா இருந்து விடுவோமானால், அந்தக் குதிரையின் முதுகிலிருந்து நாம் கீழே இறங்கி விட்டவர்களை ஆகி விடுகிறோம், அப்படி நாம் இறங்கி விட்ட நிலையில், மனம் என்ற அந்தப் பராசாரிக் குதிரையும், தானாகவே அடங்கி அமர்ந்து விடும். மனதின் துடிப்பையும் தவிப்பையும் தணித்துக் கொள்வதற்கு இதுவே தலை சிறந்த வழி.

### அமைதிப் பயிற்சி

அதாவது மனத்தில் ஒரு துடிப்போ, தவிப்போ ஏற்படும் போது, அதற்குக்காரணமாய் இருந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் எண்ணாமல் நம்முடைய கட்சியில் நியாயம் இருக்கிறதா, அநியாயம் இருக்கிறதா என்பதைப் பற்றிச் சிந்திக்காமல், எந்த ஒரு கருத்துமே நம் உள்ளத்தில் எழுவதற்கு இடம் கொடுக்காமல், பிறன் ஒருவனுடைய மனத்தில் நிகழும் துடிப்பையோ, தவிப்பையோ பார்ப்பதற்கு நமக்குச் சக்தியிருக்குமானால் அந்தத் துடிப்பிலும், துன்பத்திலும் நாம் மூழ்கிவிடாமல் எப்படி விலகிநின்று பார்ப்போமோ, அப்படியே நம்முடைய உள்ளத்தில் நிகழும் துடிப்புக்களையும், தவிப்புக்களையும் நாம் விலகிநின்று பார்க்கவேண்டும். அப்படி நாம் எப்போது பார்க்கத் தொடங்குகிறோமோ, அப்போதே நம்முடைய மனமும் அடங்கத்தொடங்கும்.

மனம் இவ்வாறுதானாகவே அடங்கித் தணிகின்ற ஒவ்வொரு சமயத்திலும், அதைப் பற்றியுள்ள மனநோய்களும் தாமாகவே சிறிது சிறிதாகக் குணம்அடைகின்றன, மன நோய்கள் குணம்அடைய, அடைய, மனம் மேலும் மேலும் அமைதி அடைகிறது. எனவே, மனத்தில்ஏற்படுகிற அமைதியின் அளவைக் கொண்டே, நம் உள்ளத்தினது ஆரோக்கிய வளர்ச்சியையும நாம் தெரிந்துகொள்ளலாம்.

சுருக்கமாகச்சொன்னால் மனஅமைதி வேறு. மன ஆரோக்கியம் வேறுஅல்ல! இரண்டும் ஒன்றே! மனதிற்கு இடையறாத அமைதிப்பயிற்சி அளிப்பதே, நம்மனத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கான தலை சிறந்த வழியாகும். அந்தவழியைகையாண்டு மக்கள் அனைவரும் மனஆரோக்கியம் பெறுவார்களானால் அப்புறம் இந்த மண்ணுலகமே ஒரு பொன்னுலகமாகமாறிவிடும்.

## ஆசிரியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின விழா இன்று காலை 10.30 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய தபால் திணைக்கள பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் நா.சுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார்.

(க-3)

## இன்று ஒரு தகவல்

கூறினான். அவன் சொல்லை நம்பிப் பரசு அதிகாரியிடம் சரண் புகுந்தான். அதிகாரி பரசுவைக் கைது செய்து அழைத்துச் சென்றான்.

வழக்கு விசாரணையின் போது குற்றம் மறுக்கப்படவில்லை. எனினும் இராணுவ அதிகாரி தன் வாக்குப்படி அரசனிடம் மன்றாடிப் பரசுக்கு விடுதலை வாங்கித் தந்தான். பரசு விடுதலையடைந்தான். தான் செய்தது நல்ல காரியமே ஆனாலும் சட்டத்திற்குப் புறம்பானது என்பதை அவன் உணர்ந்தான். சாத்துவிகமான முறையில் மக்களுக்குச் சேவை செய்வதும், ஆண்டவனிடம் பக்தி செலுத்துவதுமே சிறந்த வாழ்க்கை என்பதை உணர்ந்தான், தன் கூட்டத்தைக் கலைத்து விட்டு ஹரித்வார் சென்றான். ஆண்டவனிடம் பக்தி கொண்டு தவம் செய்ய ஆரம்பித்தான்.

சுவாமி கமலத்மானந்தர்

## ஆசிரியர் தின நிகழ்வுகள்

(ஊர்காவற்றுறை)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இன்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு ஆசிரியர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்களினால் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

(க-75)

## நியமனம்

(செம்பியன்பற்று)

கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரியாக கடமையாற்றிவந்த பு.தங்கராசா நேற்று ஒய்வு பெற்றதையடுத்து அவரின் இடத்திற்கு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய எஸ்.வசிகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(க-42)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர்செய்யுங்கள்

சென்ற வாரத் தொடர்ச்சி.......

## சோதிடபலன்

**உடல் எண் - 2, உயிர் எண் - 9**

2, 11, 20, 29 போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால் இவர்கள் சந்திரன் செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்களுடைய உடல் எண்ணாகிய 2க்கு உயிர் எண்ணாகிய 9 எதிரியாக இருந்தால் தனக்குத்தானே கெடுதலைத் தேடிக்கொள்ளுவர். தவறு என்று தெரிந்தும் அக்காரியங்களில் இறங்கி மாட்டிக் கொண்டு பின்வருந்துவர். இதனால் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயரை அமைத்துக் கொண்டாலோ அல்லது இயற்கையாக அமைந்திருந்தாலோ எல்லா செல்வங்களும் பெற்று வளமான வாழ்க்கையைப் பெறுவர்.

### குறுக்கு விசாரணையில் வல்லமை

மனப் பலம் மிகுந்த இவர்கள் எதையும் துணிந்து செய்து வெற்றி அல்லது தோல்வியைச் சந்திப்போம் என்ற எண்ணங் கொண்டவர். பிடிவாதமும் தன்னம்பிக்கையும் கொண்ட இவர்களுக்குப் பெயர் நன்கு அமைந்திருந்தால் எல்லாம் வெற்றி ஆகும். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் தோல்வி அடைவர். பின் வயது ஏற ஏற நிதானமாகச் செயல்படுவர். எப்பொழுதும் காரசாரமாகப் பேசும் ஆற்றலும் குறுக்குக் கேள்வி கேட்கும் ஞானமும் கொண்டு விளங்குவர். வழக்கறிஞராக இருந்தால் நன்கு குறுக்கு விசாரணை செய்வர்.,

பொதுவாக இவர்கள் எல்லோரிடமும் வம்புக்காரர் என்ற பட்டத்தைப் பெறுவர். பஞ்சாயம் செய்வதாலும் சாமாதானம் செய்யும் திறமையாலும், ஆத்மீகத் துறையைத் தெரிந்து வைத்திருப்பதாலும் பலரைத் தன் வசமாக்கிக்கொள்ளுவர். இவர்களைக் கண்டு எதிரிகள் அஞ்சுவர் ஆனால் இவர்களுக்கு எப்பொழுதும் எதிர்ப்புக்கள் உண்டு. உத்தியோகம் செய்பவர்களாயிருந்தால் உத்தியோகம் பார்க்கும் இடங்களில் எதிர்ப்புக்கள் இருந்து கொண்டே இருக்கும்.

### நல்ல மனம்

நல்ல மனம் கொண்ட இவர்கள் திடீரென்று தோன்றும் முரட்டுக் குணத்தால் தன் பெயரைக் கெடுத்துக் கொள்ளுவர். மருத்துவம் சாஸ்திரம் சமயம் போன்ற துறைகளில் அதிக நாட்டம் செலுத்துவர். இந்த எண்களில் பிறந்த சிலருக்கு பெயர் நன்கு அமையவில்லையென்றால் குறிப்பிட்ட வயதில் திருமணம் நடைபெறுவதில்லை. அப்படி நடந்தாலும் சிக்கலான திருமணமாகத்தானிருக்கும். திருப்பதி இல்லாத குடும்பம் நடத்தும் அவர்கள் பெயரைத் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொண்டால் எல்லா வளமும் பெற்று வாழ்வர்.

### தொழில்

இவர்களுக்கு விவசாயம், கமிஷன், கண்ட்ராக்கட், போதித்தல், வழக்குத் தீர்த்தல் போன்றவற்றால் பணம் சேரும்.

### நோய்

மூலம் உஷ்ண சம்பத்தப்பட்ட வியாதிகள் அனைத்தும் வர வாய்ப்பிருப்பதால் பெயரைத் தனது பிறந்த தேதிக்குத் தகுந்த மாதிரி அமைத்துக் கொண்டால் நோய் மாறலாம்.

### பெயர் அமைக்கும் முறை

சந்திரனும், செவ்வாயும் ஆதிக்கம் பெற்ற இவர்களுக்குச் சுக்கிர ஆதிக்கமான 15, 24, 33, 42, 51, 69 போன்ற எண்களிலும் புதன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொண்டு சீரும் சிறப்புமாக வாழலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் - 6, 5, யோகமான தேதிகள் - 6, 15, 24, 5, 14, 23. யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து, சந்திரகாந்தக்கல், யோகமான நிறம் - வெள்ளி நிறம்-வெளிர் நீலம், வெளிர் மஞ்சள், ஆகாத நிறம் - சிவப்பு, ஆகாத தேதிகள் - 9, 18, 27, நல்ல நண்பர்கள் உண்டு.

**உடல் எண் - 3, உயிர் எண் - 1**

3,12,21,30 போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம் வருடம் மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் ஒன்று (1) வருமேயானால், இவர்கள் குரு, சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் ஆவர். இவர்களில் பலர் அரசாங்க உத்தியோகத்திலும், சிலர் தொழில் செய்து கொண்டும் இருக்கின்றனர். இயற்கையிலேயே நேர்மையான குணம் கொண்ட இவர்கள் தம் மனதிற்குப் பிடிக்காத எக்காரியங்களிலும் ஈடுபடமாட்டார்கள். மனச்சாட்சியை தெய்வமாக நினைக்கும் இவர்கள் சில பிரச்சினைகள் வரும்போது மனத் துணிவுடன் செயல்படுவர்.

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னுடைய மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குப் பணிந்து நடப்பர். ஆனால் அடிமையாக நினைத்து விரட்டினால் எதிர்க்கவும் தயாராக இருப்பர். சில பிரச்சினைகளை விவாதிக்கும்போது, சிலருடைய வழக்குகளைப் பஞ்சாயத்துச் செய்கிறபோதும், ஒரு சாராருக்குச் சார்ந்து பேசாமல் நடு நிலையாக நின்று நேர்மையாகப் பேசும் நல்ல மனம் கொண்டவர்கள்.

### குருவின் பொதுப் பலன்கள்

3, 12, 21, 30 போன்ற தேதியில் பிறந்தவர்கள் எல்லோரும் குரு ஆதிக்கம் கொண்டவர்களே 3 என்ற எண்ணிற்கு குரு என்றும், ஜோதிடத்தில் தேவகுரு என்றும் அழைக்கப்படுகிறது. 'குரு இல்லா வித்தை சொத்தையாகி விடும்' என்பதைப்போல குரு ஆதிக்கம் இல்லாத அமைப்பும், குரு அனுக்கிரகம் இல்லாதவர்களின் வாழ்கையும் சிறப்படைவது சிரமமே.

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நல்ல ஆசிரியர்களாகவும் நாட்டின் முக்கியமான பொறுப்புகளை வகிக்கும் நிர்வாகிகளாகவும், சமுதாயத்தைச் சீர்திருத்தும் எழுத்தாளர்களாகவும், தொழில் அதிபர்களாகவும் திகழ்வர். இவர்கள் இயற்கையிலே நீதி, நேர்மை நிதானம் நடு நிலைமை முன்பின் நடப்பதை ஆராய்ந்து செயல்படுதல், வெற்றி தோல்வியால் மனம் மயங்காதிருத்தல் போன்ற கொள்கைகளை மேற்கொண்டு வாழ்வர்.

ஓரளவு உயரமாகவும், மெழுகி விட்டாற்போல் சதைப்பற்றும் உள்ளவர்களாகக் காட்சியளிப்பர். சிந்தனை அதிக்கம் கொண்ட இவ்களுக்கு இளமையிலே வழுக்கைவிழுந்து விடும். எளிதில் யாரிடமும் ஏமாறாத இவர்கள், யாரையும் ஏமாற்றும் எண்ணமும் இல்லாதவர்கள். இவர்களுக்கு

### மன இரக்கம் உள்ளவர்

இவர்கள் நடுத்தரமான உயரமுடையவர்களாகவும், லேசாகக் கண் சிவந்து கருணை ஒளி வீசும், கண்களுடையவர்களாகவும் விளங்குவர். புருவங்கள் வரைந்தது போன்றிருக்கும். லேசாக முடி சுருண்டிருக்கும். உஷ்ணம் அதிகம் கொண்டவர்களாதலால் முடி உதிரும். இதனால் குளிர்ச்சிக்கு மருந்து தேடுவார்கள். உண்மையான அன்பு கொண்ட இவர்கள் இதயத்தால்

**ஆர்.கே.துரைமுருகர்**

பழகுவார்கள். பிறரது கஷ்டத்தைக் கண்டு மனம் இரங்கி உதவ முன் வருவர். தன்னை நாடி வருபவர்களை வரவேற்று உபசரிக்கும் இவர்கள் போலியாகப் பேசத் தெரியாத காரணத்தால் மற்றவர்கள் பொல்லாதவர்கள் என்று எண்ணுமளவிற்கு இருப்பர்.

### நிர்வாகத் திறமை

சிறந்த நிர்வாக சக்தியும், பலரைக் கட்டிக் காக்கும் திறமையும் கொண்ட இவர்களுக்குப் பிறந்த திகதிக்குத் தகுந்தவாறு பெயர் அமைந்துவிட்டால், பொன், பொருள், மனைவி, மக்கள், ஆரோக்கியம் ஆகியவற்றைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்வர். இதனால் வாசகர்கள் இந்த எண்ணிற்குப் பொருத்தமான பின்னால் கொடுக்கப்பட்ட எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளுவது அவசியம் இவர்கள் அநேகமாக கடைகள், கல், நெருப்பு, உலோகம் சம்பந்தமான தொழில்களைச் செய்து பெரும் பணம் சம்பாதிக்கின்றனர்.

இயற்கையிலேயே இவர்களுக்கு பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் நல்ல கல்வியும், பேரறிவும் பெற்றுச் சிறந்த உத்தியோகத்தை வகிக்கின்றனர். தனது திறமையாலும், நிர்வாக சக்தியாலும் உயர் பதவிக்கு மாற்றப்படுகின்றனர். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் மேற்படிப்பு படித்து நேர்மையான அதிகாரிகளாக இருக்கின்றனர். இன்னும் சிலர் சிறிய உத்தியோகத்தில் இருந்தாலும், அவர்களும் கண்ணியமாக இருந்து பெரியோரை மதித்து வாழ்க்கையில் உயருகின்றனர்.

### தொழில்

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் இருந்தாலும் மற்றொரு வருமானம் வருகின்ற வாய்ப்பு உண்டு. உத்தியோகம் இல்லாதவர்கள் உலோகம், நெருப்பு, கல், மரம் போன்ற தொழில்கள் செய்வதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெறலாம். கடைகள் வைப்பதன் மூலமும் செல்வம் சேரும். இவர்கள் பெயர் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமையாவிட்டால் மேற்குறிப்பிட்ட பலன்கள் எல்லாம் நடக்காது.

### நோய்


இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு உடலில் அதிக உஷணம் இருப்பதால், உஷ்ண சம்பந்தமான அனைத்து வியாதிகளும் வர வாய்ப்பு உள்ளது. சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு, கண் நோய் வராமல் தடுப்பதற்கு உப்பு, சர்க்கரை இவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும். 9 எண்ணிக்கையைச் சார்ந்த 45 எண் வருகின்ற மாதிரி பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் நோய் குணமாகும் செல்வ விருத்தியாகும்.

### பெயர் அமைக்கும் முறை

பொதுவாக மூன்று எண்ணிக்கைக் காரர்களுக்கு 3 எண் வருகிற மாதிரிப் பெயரை அமைத்துக்கொள்வது நல்லது. ஆனால் கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருவதால் 1 எண் வருகின்ற மாதிரியும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். உதாரணமாக 3 எண்ணிக்கையில் 21, 39 போன்ற எண்ணிக்கையிலும், 1 எண்ணிக்கையில் 19, 46, 64 போன்ற எண்ணிக்கைகளில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் - 3, 1 யோகமான தேதிகள் 3, 12, 21, 30; 9, 18, 27; 1, 10, 19, 28 யோகமான மோதிரக்கல் - தங்க புஷ்பராகம், கனக புஷ்பராகம், எமிதிஸ்டு. யோகமான நிறம் - றோஸ், ஆரஞ்சு, கத்திரிப்பூ நிறம், நீலம், மஞ்சள். ஆகாத தேதிகள் - 26, 15, 24. ஆகாத நிறம் - கறுப்பு, பச்சை.



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நூலக வாரத்தின் போது நெல்லியடி வர்த்தகர் எஸ்.தெய்வேந்திரம் வித்தியாலய நூலகத்திற்கென ஒரு தொகுதி நூல்களை அதிபர் திரு.எஸ். சேதுராசாவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

**அரச நிறுவனங்களில்**

# வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கப் பணிப்பு

(கொழும்பு)

சகல அரசாங்க நிறுவனங்களும் அவற்றின் வருடாந்த அறிக்கைகளையும், கணக்கறிக்கைகளையும் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

விரிவான நிதிக் கொள்கை ஒன்றின் மூலம், அரசாங்கத் துறையை மேலும் பலப்படுத்தும் நோக்குடனேயே அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

அரசுக்கு சொந்தமான நிதி விவகாரங்கள், முகாமைத்துவம் போன்றவற்றின் உண்மைத் தன்மையை வெளிக் கொணர்வதற்கும் இந்நடவடிக்கை உதவும் எனவும் நம்பப்படுகிறது.

தறபோது அமைச்சரவை மட்டங்களில் இருந்துவரும் இறுக்கமற்ற கொள்கை காரணமாக பல நிறுவனங்கள் அவற்றின் நிதி அறிக்கையினை சமர்ப்பிக்க வருடங்கள் பல எடுக்கின்றன என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (க-08)

## மிதிவெடியில் சிக்கி கால்இழப்பு

(மந்திகை)

விறகு எடுக்கச் சென்ற இளைஞன் மிதிவெடியில் சிக்கி தனது இடது கால் பாதத்தினை இழந்தான்.

நேற்றுமுன்தினம் வடமராட்சி முள்ளி பகுதியில் இடம்பெற்ற இவ் அனர்த்தத்துல், துன்னாலை தெற்கைச் சேர்ந்த சிவலிங்கம் சிவாகரன் (வயது 24) என்ற இளைஞரே கால் பாதத்தினை இழந்தவராவார். (இ-23)

## மோசடி புரிந்த இலங்கையர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச் சீட்டு மோசடியில் ஈடுபட்டு வந்த இலங்கையர் உட்பட மூவரை இந்திய மத்திய குற்றப் பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து இந்தியாவில் வசிக்கும் பாஸ்கரன் என அழைக்கப்படும் இராஜேந்திரன் எனும் நபரும் வேறு இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதையடுத்து நீண்டகாலமாக இடம் பெற்றுவந்த கடவுச்சீட்டு மோசடியொன்று அம்பலமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. (உ)

## ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில், உலக ஆசிரியர் தினவிழா இன்று திங்கட்கிழமை பி.ப1 மணிக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் மு. சுகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சு. சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக யாழ் இந்துக் கல்லூரி அதிபர் அ . பஞ்சலிங்கமும், கௌரவ விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-10)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்கள் சேவையின் II ஆம் தர அலுவலர்களுக்கான I ஆம், II ஆம வினைத்திறன் காண் நடைப் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இலங்கைப் பரீட்சைத் திணைகளம், பெலவத்த, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். (உ-3)

## போதைப் பொருட்கள்மீட்பு

(கொழும்பு)

கல்முனை நிந்தவூர் 6ஆம் குறிச்சிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்களை கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழு நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளது.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களில் சுமார் 32 கிலோகிராம் கஞ்சா, மற்றும் கஞ்சாத்தூள் உட்பட சுடுநீரில் கலக்கி அருந்தும் கருங்கோப்பி பொதிகளும் அடங்கியுள்ளன. (உ-8)

## புதிய கற்கை நெறிகளுக்கு ஆணைக்குழு அனுமதி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இலத்திரனியல், சிவில் பொறியியல், இயந்திரவியல் ஆகிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தினை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான திட்ட அறிக்கையினை ஒரு மாத காலத்துக்குள் தயாரித்து அனுப்பும்படியும் யாழ் பல்கலைககழகத்திற்கு மானிய ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந-77)

## 172 பாடசாலைகள் இயங்கவல்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள 1817 பாடசாலைகளில் 172 பாடசாலைகள் இயங்காமல் மூடப்பட்டுள்ளன.

தற்போது இயங்கி வரும், பாடசாலைகளில் 622 பாடசாலைகள் கிராமப்புறங்களில் இயங்கி வருகின்றன. (ம)

# அரச அலுவலகங்களில் வெற்றிடங்கள் நிரப்ப உலகவங்கி உடன்அனுமதி

(கொழும்பு)

அரசாங்க அலுவலகங்களில் நிலவிவரும் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்ப உலக வங்கி அனுமதியளித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகளுக்கும் உலகவங்கி அதிகாரிகளுக்கும் இடையே அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இதற்கிணங்க அரசதிணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகார சபைகளில் நிலவும் வெற்றிடங்கள்தொடர்பான விபரங்கள் மாவட்ட செயலகங்கள் மூலம் திரட்டப் படுகின்றன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்விபரங்களை நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன் சமர்ப்பிக்குமாறு அம்மாவட்ட அரச நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுக்கு சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டு ஒரு தொகுதியினருக்கு மாத்திரம் நியமனம் வழங்கப்பட்டும் ஏனையவர்களுக்கு அனுமதி வழங்கப்படாமல் இருப்பது மாத்திரமன்றி அரச திணைக்களங்கள் பலவற்றில் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதும் ஏற்கனவே தெரிந்ததே.

(க-08)

# யாழ். பல்கலைக் கழகத்தில் பொறியியல், இயந்திரவியல் கற்கை நெறிக்கு அனுமதி

(தென்மராட்சி- வடமராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இலத்திரனியல், சிவில் பொறியியல், இயந்திரவியல் ஆகிய புதிய பகுதிகளை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தினை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ பாலசுந்தரம் பிள்ளை யாழ் அரச செயலகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரான இந்து கலாசார விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் துணைவேந்தர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்;

எமது பல்கலைக்கழகத்தில் மேலே குறிப்பிட்டபகுதிகளை ஆரம்பிப்பது பற்றி நாம் ஒரு திட்ட அறிக்கையை ஒரு மாத காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திக்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து உதவி பெறுவதை கொள்கை ரீதியில் நான் ஏற்றுக் கொள்ளாமையினால் நான் எதையும் கோரவில்லை. பல்கலைக் கழகத்தில் இரு கட்டடங்களைக் கட்டுவதற்கு கட்டடத் திணைக்களத்துக்கு 40 மில்லியனை வழங்கியுள்ளேன் ஆயினும் கல், மண் சல்லி போன்றவற்றினை அவர்கள் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதால், குறித்த வேலையைத் தொடர்வதில் பிரச்சினைகளை எதிர் நோக்கிவருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

(க-77)

# யாழ். குடாநாட்டில் 1990 ம் ஆண்டிற்குமுன் மின்னிணைப்பு வழங்கப்பட்டபகுதிக்கு மீண்டும் மின் வசதி வழங்கப்படும்

## மின்சாரசபை வட-பிராந்திய பொது முகாமையாளர்

(தென்மராட்சி)

யாழ் குடாநாட்டில்1990ம் ஆண்டிற்கு முன் எங்கெங்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டதே அவ்விடங்களுக்கு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மின்னிணைப்பு வழங்கப்படும் என வட-பிராந்திய மின்சார சபையின் பொது முகாமையாளர் எஸ் இரட்ணானந்தம் தெரிவித்துள்ளார்.

யாழ் செயலகத்தில் அண்மையில இடம்பெற்ற தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மின்சார இணைப்பு தொடர்பான வேலைகளுக்கு வேண்டிய உபகரணங்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவி வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளதுடன், உள்நாட்டில் பெறப்படும் மின்சார தூண் போன்றவற்றுக்கும் நிதியுதவி அளிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்;

யாழ்ப்பாணம் - அரச போதனா வைத்தியசாலை பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்ட சமயம் இவ்வைத்தியசாலையில் விபத்து சத்திர சிகிச்சைப் பிரிவு ஒன்று அவசியம் அமைக்கப்பட வேண்டும் எனவும் இத்திட்டத்துக்கு 78 மில்லியன் ரூபா தேவையெனவும் வைத்தியசாலைப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

அவ்வேளையில் தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான எம். கே. சிவாஜிலிங்கம் குறிப்பிடுகையில:

யாழ்ப்பாண வைத்தியசாலையின் குறைகள், தேவைகள், பிரச்சினைகள் பற்றிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை. ஆதலால் அங்கு என்ன நடைபெறுகின்றது என்பது பற்றி எமக்குத் தெரிவதில்லை;

யாழ். வைத்திய சாலை பற்றி நாம் பத்திரிகைகள் மூலமே அறியமுடிகின்றது. யாழ். வைத்தியசாலை தற்போது அமைந்துள்ள இடம் அதன் எதிர்கால அபிவிருத்திக்கு உகந்த இடமாக இருக்கவில்லை. எனவே இதனை வேறு இடத்துக்கு மாற்றுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

அத்துடன் வைத்தியசாலையின் சுற்று வட்டாரத்தில் தங்கியிருக்கும் பாதுகாப்புப் படையினர் அவ்விடத்தில் இருந்து வாபஸ் வாங்க வேண்டும் என எம். கே. சிவாஜிலிங்கம் எம். பி தெரிவித்தார். பலரும் இதற்கு ஆதரவு தெரிவித்ததுடன்,

இக் கூட்டத்தில் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, விளையாட்டு போக்குவரத்து, போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

(க-77)

# விழிப்புக்குழு செயற்பாடு

(காரைநகர்)

காரைநகர் கசூர்னா கடற்கரையில் கலாசார நடவடிக்கைகளைப்பாதுகாக்கும் விழிப்புக்குழு இன்று முதல் தமது பணியை ஆரம்பித்துள்ளதாக விழிப்புக் குழுவின் தலைவர் எஸ். திருப்புகலூர்சிங்கம்தெரிவித்துள்ளார். (க-246)

# பயணிகள் கஷ்டம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதன்கேணி பாலம் சேதமடைந்துள்ளதால் அவ் வீதியூடாக செல்லும் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

(க-23)

# குளங்கள் புனரமைப்பு

(துன்னாலை)

தென்மராட்சிப் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மழைநீரைத் தேக்கி வைத்து எதிர்காலத்தில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்ளவும், நன்னீர் மீன் வளர்ப்பினை மேற்கொள்ளவும் முடியுமென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். ((க-41)

# அரசு-புலிகள் பேச்சு மூலம் நல்லதொரு தீர்வு கிடைக்கும்

## வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற அடிப்படையில் அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளார்கள்.

இப்பேச்சுவார்த்தை மூலம் அரசு நல்லதொரு தீர்வினைத் தருமென நாங்கள் எண்ணுகிறோம் என வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

இந்திய இலங்கை கூட்டுச்சதி முயற்சி காரணமாக வீரச்சாவினைத் தழுவிக் கொண்ட தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு வீரவேங்கைகளின் 15வது நினைவுதின வைபவத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

இந்த நினைவுதின நிகழ்வுகள் வவுனியா புதுக்குளம் விளையாட்டு மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றன.

தமிழீழ விடுதலைப் பறவை இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் இந்நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வைபவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப்பிரிவைச் சேர்ந்த கதிரவன், மற்றும் மாவீரரின்பெற்றோர் அங்கு வைக்கப்பட்டிருந்த பன்னிரு வேங்கைகளின் உருவப்படங்களுக்கு சுடரேற்றி, வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சதாசிவம் குலதேவராசா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வன்னிமாவட்ட செந்தில்நாதன்ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். இவ்வைபவத்தில் பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர்,

(ம)

# கிணறுகள் புனரமைப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலுள்ள கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிப் பகுதியில் பொதுமக்கள் மீள குடியமர்ந்துள்ளதை அடுத்து 10 பொதுக்கிணறுகள் லங்கா சேவா நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (க-23)

# நோயாளர் அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையில் கட்டில் வசதிகள் போதாமை காரணமாக சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் பலவாட்டுகளில் நிலத்திலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக நோயாளர்கள் பல்வேறுவிதமான சிரமங்களையும், வசதியீனங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இதேசமயம், இவ்வைத்தியசாலையில் சிகிச்சைபெற வருகின்ற நோயாளர்களின் தொகையும் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்களில்இருந்து அறியப்படுகின்றது. (க-77)

# விதை நெல் வந்தது

(காரைநகர்)

வேலணைகமநல சேவைகள் நிலையத்தில் காலபோக நெற்செய்கைக்கென ஏ. ரி. 353 இன விதை நெல் 50 புசலும் எல். டி. 356 ரக இன விதை நெல் 20 புசலும் வந்துள்ளதாக வேலணை கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர்தெரிவித்துள்ளார்.

விதைநெல்தேவையானோர் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-246)

# ஆசிரியர் பற்றாக்குறை

(காரைநகர்)

காரைநகர் யாழ். வியாவில் சைவவித்தியசாலையில் ஆசிரியர்கள் பற்றாக் குறையாக உள்ளதாக ஆசிரியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கீதம், சித்திரம் போன்றவற்றிற்கும், சமூகக்கல்வி பாடத்தினையும் கற்பிப்பதற்கே ஆசிரியர்பற்றாக்குறையாக உள்ளது,

இப்பாடசாலையில் பலகாலமாக குடிநீர் இல்லாத நிலையிலேயே உள்ளது. இதனால்இப்பாடசாலை மாணவர்கள் வீட்டில் இருந்தே கொண்டுவந்து குடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில் இப்பாடசாலையில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன உதவியுடன் புதிய மலசலகூடம் அமைக்கப்பட்டு வருகின்றது. (க-36)

# வியாபாரி காலிழப்பு

(மந்திகை)

விறகு பொறுக்கச்சென்ற வியாபாரி மிதிவெடியில் சிக்கியதில் இடதுகாலைஇழந்த சம்பவம் துன்னாலைதெற்கில் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றது;

துன்னாலை தெற்கைச் சேர்ந்த சிவலிங்கம் சிவாகரன் என்பவரே தனது இடது காலை இழந்தவராவார். மற்றைய காலிலும் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளது. (க-23)

# பலலட்சம்பணம்கொள்ளை துப்பாக்கிநபர்கள்கைவரிசை

(கொழும்பு)

ஆயுதம் தாங்கிய கோஷ்டி வீடு ஒன்றில் புகுந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பணத்தையும் பொருட்களையும் கொள்ளையிட்டு சென்ற சம்பவம் ராகலைப் பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட மகாக்குடுகல அப்பலவாம் என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் ஆறுபேர் கொண்டகுழுவில் இருவர் பொலிஸாரின் சீருடையுடனும்ஏனையோர் இராணுவ கொமாண்டோவை ஒத்த சீருடையிலும் காணப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட நபர்களிடம் ரீ-56ரகதுப்பாக்கி மூன்றும் தன்னியக்க கைத்துப்பாக்கி இரண்டும் காணப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(க-10)

# குளிப்பதற்கு வரி அறவீடு

(தென்மராட்சி)

கீரிமலை நகுலேஸ்வரம் கேணியில் குளிப்பவர்களிடம் இருந்து இன்று முதல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை வரி அறவிடவுள்ளது.

இதற்கான அனுமதியை இந்து கலாசார விவகார அமைச்சர்தி. மகேஸ்வரன்வலி வடக்கு பிரதேசசபைத் தலைவர் திருமதி பாஸ்கரனிடம் வழங்கியுள்ளார். (க- 77)

# விதை நெல் விநியோகம

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்த 217 விவசாயக் குடும்பங்களுக்கு சர்வோதய இயக்கம் விதைநெல்லினை வழங்கி உள்ளது.

(க-23)

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

குறள்

# வலம்புரி

## கைதிகளின் அவலம் தீருமா?

நம்மை விடுதலை செய்யக்கோரி களுத்துறைச் சிறையிலுள்ள 139 தமிழ்அரசியல் கைதிகள் 7வது நாளாகத் தொடர்ந்து உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை, தாய்லாந்தில் சமாதானப் பேச்சு என சமாதான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தென்னிலங்கைச் சிறைகளில் கைதிகள் அடைபட்டிருப்பது வேதனை தரும் நிகழ்வாகும். விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்லது விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழ்க் கைதிகள் இன்னமும் சிறைகளில் வாடுவதென்பது எவ்வகையிலும் நியாயமாகாது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்கிய கையோடு சிறைகளில் உள்ள யுத்தக்கைதிகளையும் விடுதலை செய்திருக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச்சட்டம் என்பன அமுலில் இருந்த போது கைது செய்யபபட்டவர்கள் அச் சட்டங்கள் அமுலில் இல்லாதபோதும் சிறைகளில் தடுத்து வைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

இதேவேளை தமது விடுதலைக்காக சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அரசு கைதிகள் விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் அத்துடன் சிறைகளில் விடுதலைக்காகப் போராடுகின்ற கைதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற பொறுப்பு பொது அமைப்புகளுக்கு உண்டு.

சிறைகளில் வாடுகின்ற தமிழ்க் கைதிகள் எந்தக் குற்றமும் அறியாதவாகள் அவர்கள் கைது செய்யப்பட்டதற்குக் காரணம் தமிழினவாதமே எனவே தமிழினம் என்ற ஒரே காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுப்பது ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும்.

# உள நோய்களை ஒழிப்பதற்கு ஒரேயொருவழி

# மனத்திற்கு அமைதிப் பயிற்சி அளித்தலேயாகும்

தமிழ்வாணன்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனபது உடலைப்பற்றிய ஆரோக்கியத்தை மட்டுமே குறிக்கின்ற ஒரு பழமொழிஅல்ல. உள்ளத்தைப் பற்றிய ஆரோக்கியத்துக்கும் அது நூற்றுக்கு நூறு பொருந்தும்! உடலுக்கு நோய் வருவதைப் போலவே, உள்ளத்துக்கும் நோய்கள் வருவது உண்டு என்பது நம்மில் மிகப்பலருக்குத் தெரியாது. ஆனால், உண்மைஎன்னவென்றால், உடல் நோய்களைக் காட்டிலும் உள்ளத்தின் நோய்களால் தான் மனிதன் மிகுதியாகத் துன்பப்படுகிறான்.

உலகநாடுகளுக்கு இடையே போர்கள் எதனால் மூளுகின்றன, அவற்றை ஆட்சி புரியும் அதிபர்களின் மனநோய்களே அதற்குக்காரணம்? எடுத்துக் காட்டாக ஹிட்லரின் மனநோய்தான் இரண்டாவதுஉலகப்போரைத்தோற்றுவித்தது. அரசியல் தலைவர்களின் மனநோய்கள் தாம் கட்சிகள் உடைவதற்கும் சனநாயகம் சிதைவதற்கும் காரணமாய் இருக்கின்றன;

### தனிப்பட்டவரின் மனநோயினால் சமூகசீரழிவு

குடும்பத்தலைவனோ தலைவியோ மனநோய் உடையவர்களாய்இருந்து விட்டால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற எல்லோருமே நரகவேதனைக்கு ஆளாக நேரிடும். பிள்ளைகள மனநோய் கொண்டவர்களாய் இருந்துவிட்டால், பெற்றோர்களுககு அதைக் காட்டிலும் சித்திரவதைவேறு எதுவும்மே இருக்க முடியாது. இப்படியாக ஒருசில தனிப்பட்டமனிதர்களின் மன நோய் காரணமாகச் சமுதாயத்தின் எல்லாமட்டங்களிலுமே மக்களின் வாழ்க்கை சீர்குலைவு அடைவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இன்று நம் நாட்டில் காணப்படுகிற சீர்கேடுகள அனைத்துமே இவ்வாறு தான் தோன்றிவளர்ந்து வந்திருக்கின்றன!

காலரா, பிளேக் போன்ற (உடலைப்பற்றிய)கொள்ளை நோய்களால் கூட சமூகத்திற்கு இவ்வளவு பெரியதீங்குகள்நேர்வதில்லை உள்ளததைப் பற்றிய நோய்களால்தான் உலகப் போர்கள் போன்ற மாபெரும் தீங்குகள் நேர்ந்து விடுகின்றன, இது மட்டுமல்ல, சமுதாயத்திலே உடல் நோய் எதுவுமேயில்லதா பல்லாயிரக்கணக்கான ஆண்களையும், பெண்களையும் நம்மால் சந்திக்க முடியும், ஆனால்மனநோய் எதுவுமே இல்லாத ஆண்கள், பெண்கள் உலகில் கோடிக்கு ஒருவர் கூடத்தேறுவதுஅரிது.

பெரிய பெரிய மேதாவிகள் வேதாந்திகள் விஞ்ஞானிகள் பேராசிரியர்கள் பேரறிஞர்கள் என்று பேர் எடுத்தவர்கள் எல்லாம் கூட ஏதாவது ஒருவகையான மனநோய் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய எழுத்துக்களையும் பேச்சுக்களையும் நாம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், இந்த உண்மை நமக்குத் தெளிவாகப் புலப்படும். பெரும் புகழ் படைத்த பெரியவர்களின் நிலையே இப்படியென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்.

### மனநோயாளர்களுக்கு மருத்துவவசதி குறைவு

எனவே சமூகத்தில் உடல் நோயாளர்களைக் காட்டிலும் மனநோயாளர்கள் தாம் மிகப் பெரும்பான்மையோராகக் காணப்படுகிறார்கள், ஆனால் உடல் நோயாளர்களுக்கென்று நாடு எங்கிலும் ஏராளமான மருத்துவ நிலையங்கள்இருக்கின்றன, மனநோயாளர்களுக்கு அந்தஅளவுமருத்துவசதிகள் கிடைப்பதில்லை, மேலும் ஒருவனுக்கு உடல் நோய் ஏற்பட்டால், தான் நோயுற்றிருப்பது அவனுக்கு உடனே புலப்பட்டுவிடும. மனநோய் கொண்டவன் நிலை அப்படிஅல்ல, தான் நோய் வாய்ப்பட்டிருப்பதே அவனுக்குப்புலப்படுவது இல்லை.

அப்படியே புலப்பட்டாலும், அதைவெளியேசொல்லி, அதற்கான சிகிச்சைகளைப் பெறுவதற்கு அவன் முற்படுவதும்இல்லை, காரணம், தான் ஒரு மன நோயாளி என்பதை வெளியே காட்டிக் கொள்வதற்கே அவன் வெட்கப்படுகிறான்உடல் நோயாளி அப்படி வெட்கப்படுவதில்லை.

உடல்நோய் கொண்டவர்கள், தங்கள் நோயைத் தீர்க்கக் கூடியஒருடாக்டரை மிக எளிதாகத் தேடிக்கண்டு பிடித்து விடலாம். மனநோய் கொண்டவர்களால் அப்படி முடியாது. ஏனென்றால், நாட்டில் மனநோய் மருத்துவர்கள் மிகக்குறைவாகவே இருக்கிறார்கள். இருக்கும் மருத்துவர்களும் ஒரளவு மனநோய் கொண்டவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

### மன நோயைக் குணப்படுத்தல்

எனவே, நாம் ஒவ்வொருவரும், நமக்கு உள்ள மன நோய்களைநாமே கண்டுபிடித்துக் குணப்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, மருத்துவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது அவ்வளவு பயன் உடையதாய் இருக்காது. ஒருவனுக்கு உடல் நோய்வந்தால் அது அவனை மட்டுமே துன்புறுத்துகிறது. மனநோய் வந்தால், அவனைச் சூழ்ந்துள்ள எல்லாரையுமே அது துன்புறுத்துகிறது. அவன்எவ்வளவு பெரியவனாய் இருக்கிறானோ அவ்வளவு பெரும்பான்மையானமக்களைஅதுதுன்புறுத்துகிறது.

ஆகையால், ஒவ்வொருமனிதனும், தன்னுடைய சொந்த நலனுக்காக மட்டுமன்றி, தன்னைச் சூழ்ந்திருப்பவர்களின் நன்மையையும் கருதித் தனுடைய மனநோயைக் குணப்படுத்திக் கொள்ள வேண்டிய கடமை உடையவனாக இருக்கிறான். அப்படியானால்அதை எப்படிக் குணப்படுத்திக் கொள்வது? ஒரு நோயைக் குணப்படுத்துவதாயிருந்தால், முதலில் அந்தநோய் என்ன என்பதை நாம் கண்டு பிடிக்கவேண்டும். உடல்நோய்களைப் போலவே, மனநோய்களிலும் நூற்றுக்கணக்கான வகைகள் இருக்கின்றன. அவற்றுள் தனக்குவந்திருப்பதுஎந்த வகையைச் சேர்ந்தது? அதன் பெயர் என்ன என்பதையெல்லாம் ஒரு மனிதன் அவ்வளவு எளிதாகத் தெரிந்து கொண்டு விட முடியாது.

மனஇயல் நிபுணர்களே, பல மாதகாலம் ஒரு மனிதனோடு நெருங்கிப் பழகிய பிறகுதான அவனுடைய நோய் இன்னது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

அப்படியிருக்க, மன இயல் விஞ்ஞானத்தைப் பற்றிய ஆனா ஆவன்னாக்கூட அறிந்திராத சாதாரண மனிதர்கள அதை எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? பிறருக்குச் சிகிச்சை அளிக்கின்ற மன நோய் மருத்துவர்களுக்குத் தாம் அந்த நோயின் பெயர் தெரிய வேண்டுமே தவிர, தனக்குத் தானே சிகிச்சை அளித்துக் கொள்கிற ஒரு சாதாரண மனிதனுக்கு, தன்னுடைய நோயின் பெயர் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

ஏனென்றால், பிறருக்குச் சிகிச்சை அளிககிற மனநோய் மருத்துவர்கள், இன்ன நோய்க்கு இன்ன சிகிச்சை என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள். நோயின் தன்மையை முதலில் தெரிந்து நோயாளிக்கு விளக்கிக் கூறுவதில் தான் அவர்களுடைய சிகிச்சையின் அடிப்படையே அடங்கிஇருக்கிறது; ஆகையால், நோயின் தன்மையை முதலில் தெரிந்து கொண்டால் ஒழிய, அவர்களால் சிகிச்சை அளிக்க முடியாது.

### சிகிச்சைக்கு ஒரேயொருவழி

தனக்குத்தானே சிகிச்சை அளித்துக் கொள்கிற சாதாரண மனிதனின் நிலை இது அல்ல. தன்னிடத்தில் எத்தனை மனநோய்கள்இருந்தாலும், அவைஎவ்வளவு சிக்கலான வையாக இருந்தாலும் அவை அனைத்தையும்ஒரே ஓர் எளிய வழியின் மூலம் அவன் குணப்படுத்திக் கொண்டுவிட முடியும். பல்வேறு நோய்களுக்கும் ஒரே மூலிகையைப் பயன்படுத்துகிற பழைய காலத்துச் சித்தவைத்தியர்களைப் போல நமக்கு உள்ள ஆயிரம் மன நோய்களையும் ஒரேயொரு சாதனையின் மூலம் நமக்கு நாமே குணப்படுத்திக் கொண்டுவிட முடியும்.

ஆகையால், மனித உள்ளத்தைப் பீடிக்கக் கூடியபல்வேறு மனநோய்களில், நம்மைப் பீடித்திருப்பது எந்த நோய் எனபதை நாம் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியமே கிடையாது. நம்மைப் பீடித்திருப்பது எந்த நோயாக இருந்தாலும், அதற்கு அடையாளம் ஒன்றேயொன்று தான். அதுவே நம் மனதில் ஏற்படுகிற அமைதிக்குறைவு. எவருடைய மனம் எப்போதும் அமைதி உடையதாகவே இருக்கிறதோ, அவர் ஒருவர் தாம முழுமையான மன ஆரோக்கியம உடையவர். நம உளளம எந்த அளவுக்கு அமைதியை இழந்து தடுமாறுகிறதோ, அநத அளவுககு நமமிடத்தில் மனநோய் இருககிறது எனபதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, நமக்குள்ள மன நோய் எதுவாக இருந்தாலும், அந்த நோயின் காரணமாக நம உளளம் அமைதியற்றுத் துடிக்கும் போது, அந்தத் துடிப்பைத் தணித்து, மனத்தை அமைதிபபடுத்திக கொளவது ஒனறே தான் நமக்கு நாமே செய்து கொளளககூடிய சிகிச்சை முறை ஆகும்.

மனத்தின் துடிப்பைத் தணித்து கொள்வது வேறு, அதனை அடக்கிக் கொளவது வேறு, இரண்டுக்கும்இடையே மலைககும மடுவுக்கும உள்ள ஏற்றத் தாழ்வு இருக்கிறது. முதலில் இநத உணமையை நாம புரிநது கொள்ள வேண்டும். துடிககின்ற மனத்தை நாம் வலிந்து அடக்கினால், அது மேலும மேலும் துடிப்பு அடையும். ஆகையால், மனத்தை எபபோதுமே வலிநது அடக்குவதற்கு முயற்சி செய்யக் கூடாது.

வேறு என்ன செய்ய வேண்டும்? எந்தக் காரணத்தை முன்னிட்டாவது நம மனமானது துடிப்போ, தவிப்போ அடையத் தொடஙகுமானால், அப்போது நாம எந்த ஒரு சிந்தனையிலும் ஈடுபடாமல், எநத ஓர் எண்ணத்தையும்எண்ணாமல் மனத்தை மௌனமாக வைத்துக் கொண்டு, நமக்குள் நிகழும அந்தத் துடிப்பையும், தவிப்பையும் நாம் சும்மா பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், அப்படிப்பார்த்துக் கொண்டிருந்தால்' அந்தத் துடிப்பும், தவிப்பும் தானாகவே அடங்கி, நம் உளளம் சிறிது நேரத்தில தானாகவே அமைதி பெற்று விடும். மனத்துடிப்பைத் தணித்துக் கொளளும் முறை இதுவே யாகும்.

### பராசாரிக் குதிரையும்மனமும்

தில்லி பாதுஷாவினிடத்தில் பராசாரி எனறு ஒரு குதிரை இருந்ததாம். அதன் மீது எவராவது ஏறி உட்கார்ந்தால், அது மிகவும் பயங்கரமாகத துள்ளிக்குதிக்குமாம், அந்தக் குதிரையை எவராலும்அடக்க முடிய வில்லையாம. கடைசி

(6ம் பக்கம் பார்க்க)

### தினசரி தியானம்

### உண்மையான பக்தி

கடவுளிடம் வைக்கும் பக்தி தன்னல மற்றதாக இருக்க வேண்டும். சிற்றின்ப நோக்கங்கள் இருக்கக் கூடாது. தன்னலமற்றிருக்காவிட்டால் அதுமடமை மற்றும் மயக்கத்தின் ஒருமாற்றமாகத்தான்இருக்கும். பக்தியின் மேலான பலனைத் தராது, பெருமையும், சிறப்பும், உணர்ச்சி வயப்படாத தன்மையும் கொண்டுள்ள ஒரு ஞானியால் தான் சுயநலம் இல்லாத பக்தராகத் திகழ முடியும். கடவுளிடம் எதுவும் வேண்டாதவனே மிக உயர்ந்த பக்தனாவான். அவனுக்கு கடவுள் தான் வேண்டும். இதுவே உண்மையான பக்தி.

சுவாமி சிவானந்தர்

# ஐ.தே.மு - பொ.ஐ.மு பிரதிநிதிகள் அடங்கிய இணைப்புக்குழு அமைக்கப்படும்

## ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கம்

(கொழும்பு)

அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையே இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையை அடுத்து எதிரும் புதிருமாக செயற்பட்டு வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் இணைக்கும் முயற்சி வெற்றியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசினதும், ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்ட இணைப்புக் குழுவொன்றை அமைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், ஜனாதிபதி சந்திரிகாவும் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்த உயர் மட்ட இணைப்புக் குழு அரசினதும் விடுதலைப்புலிகளினதும் சமாதான முயற்சியின் முன்னேற்றம் குறித்து ஆராயவுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் அமைச்சர் மிலிந்த மொறஹொடவும், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் முன்னாள் வெளியுறவு அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிரகாமரும் இடம்பெறவுள்ளனர்.

அரசு- புலிகள் சமாதான முயற்சியில் ஜனாதிபதியையும், பிரதமரை இணைக்கும் முயற்சியில் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார் என்று வலம்புரி தனது 9ம் திகதி பதிப்பில் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# புலிகளிடம் உள்ள ஆறு படையினரும் விரைவில் விடுவிக்கப்படுவர்

## அமைச்சர் மிலிந்த அறிவிப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 இராணுவத்தினரும் விரைவில் விடுதலை செயயப்படவுள்ளனர். அதே போன்று தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவரும் பிணைமனுத் தாக்கல் செய்யப்படுவதன் மூலம் விடுதலையாகவுள்ளனர்.

இவ்வாறு பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் திருகோணமலைக்குச் சென்ற அமைச்சர் உண்ணாவிரதம் இருந்து வரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரின் பெற்றோரை திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் சந்தித்து உரையாடும் போது இவ்வாறு உறுதி மொழி வழங்கியுள்ளார்.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன, சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல மற்றும் படைத்தளபதிகள் கலந்து கொண்டனர்.

இதேவேளை கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள புலி உறுப்பினர்களை பிணை மனுத்தாக்கல் செய்து விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் கமலசபேசன் எதிர்புத் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

தம்மை விடுவிக்குமாறு கோரி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் 139 தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து நாளை வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இவ் ஆர்ப்பாட்ட பேரணி காலை 10 மணி முதல் 12 மணிவரை இரண்டு மணித்தியாலயங்கள் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாண வீதி, மன்னார் வீதி, கண்டிவீதி, ஹொறவப்பொத்தான வீதி ஆகிய நான்கு வீதிகளிலும் இருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமாகி வவுனியா நகரசபை மைதானத்தை வந்தடைந்த பின் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாக வவுனயா மாவட்ட வெகுஜன அமைபபின் ஒன்றியத் தலைவர் சதாசிவம் குலதேவராசா தெரிவித்துள்ளார். (ம)

### சர்வதேச...

தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் அவரது குழுவினரும் கொழும்பில் இருந்து நேற்றுக் காலை 10மணிக்கு விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்குச் சென்றனர்.

அங்கு அவர்கள் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பாக சுமார் ஒன்றரை மணிநேரம் ஆராய்ந்தனர்.

இதன் போது கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடுநிலையோடு நின்று இரு தரப்பினரோடும் உரையாடி திருப்திகரமான முடிவுகளை எடுப்பதுடன் இனிவரும் காலத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் வற்புறுத்திக் கேடடுக்கொண்டார்.

தமிழ்ச்செல்வனின் இந்த வேணடுகோளை அடுத்து கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இலங்கை அரசுடன் கலந்துரையாடிப் பொருத்தமான முடிவுகளை எடுப்பதாகக் கண்காணிப்புக்குழுத்தலைவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரால் கைதிகள் விடுதலை தொடர்பான உடன்பாடு ஒன்றும் வரையப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், அரசியல் துறையைச் சேர்ந்த புலித்தேவன், விசு, ஈழமாறன், ஜோர்ஜ், ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)

### முஸ்லிம்களின்...

தைக் கொண்டுவருவதென உறுதி பூண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியாக பிரபாகரன் ஒரு பலவீனமான தலைவரை தெரிந்தெடுத்திருக்கிறார். இது அவர் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்குச் செய்த தீர்மானம் ஆகும்.

கடந்த தேர்தலில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் அத்தனை பேர்களிலும் மிகப் பெரிய எண்ணிக்கை விருப்பு வாக்குகளைப் பெற்றவர் நானே. 19வது திருத்தச் சட்டமூலத்தை பொ.ஐ.முன்னணயின் பெரும்பாலான எம்.பி.க்கள் ஆதரிக்கிறார்கள் என்றும் பௌஸி தெரிவித்துள்ளார். (ந)

### ஜனாதிபதி...

திரிகா குமாரதுங்காவும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் வகையில் நடந்து கொள்வது வேதனைக்குரிய விடயம் மட்டுமல்லாமல் கண்டிக்கப்பட வேண்டிய விடயமுமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### விடுதலைப்புலி...

நெடுந்தீவுப் பிரதேசத்திலிருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) அலுவலகம் நேற்று முன் தினமிரவு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. அங்கிருந்த சிறியரக உழவு இயந்திரம் ஒன்றும், மோட்டார் சைக்கிள் மற்றும உடுபுடவைகள் உட்பட பல பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதனை சாதாரண உடையில் வந்த புலிகளும் அவர்களால் தூண்டப்பட்டவர்களுமே நடத்தினார்கள்.

இத் தாக்குதலுக்கு முன்பாக வெள்ளிக்கிழமை முன்னிரவு புலிகளால் தூண்டிவிடப்பட்ட சிலர் குடிபோதையுடன் அலுவலகத்தின் முன்பாக வந்து தாகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். அவதூறாகப் பேசினர். இதனையடுத்து ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்தவர்கள் அங்கிருந்து வெளியேற முற்பட்டபோது கத்திகளைக் காட்டி அச்சுறுத்தினர். அப்போது ஏற்பட்ட இழுபறியில் அமீன் எனப்படும் எமது கட்சி உறுப்பினருக்குக் காயம் ஏற்பட்டது. இது தொடர்பாக நெடுந்தீவில் பொலிஸ் நிலையம் அமைக்கும் பணிக்காகச் சென்று தங்கியுள்ள பொலிசாரிடம் முறையிடப்பட்டது. இச்சமயம் ஸ்தலத்திற்கு விரைந்த புலிகளின் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரைத் தமது கடமையைச் செய்யவிடா்து தடுத்து அச்சுறுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து சாதாரண உடையில் அங்கு திரண்டு வந்த புலிகளின் உறுப்பினர்களும், அவர்களால் தூண்டிவிடப்பட்டவர்களும் தாக்குதல்களை நடத்திச் சேதம் விளைவித்தனர். அத்துடன் அமீன் எனப்படும் எமது கட்சி உறுப்பினரையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஊர்காவற்துறை பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் முறையிடப்பட்டுள்ளதுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பவற்றின் கவனத்திற்கும் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பில அரசாங்கமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், சர்வதேச சமூகமும் உரிய கவனம் செலுதது இத்தகைய சம்பவங்கள் இனியும் தொடராது இருப்பதனை உறுதிப் படுத்த வேண்டுமென எதிர்பார்க்கின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

### நெடுந்தீவில்...

அப்பகுதி மக்கள் தரையிறங்க விடாது தடுத்தாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ்.மாவட்டப் பாரளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ் மாவட்டப் பிரதி அமைப்பாளர் மணிபல்லவராஜன், நெடுந்தீவுப் பிரதேச சபையின் உபதலைவர் ஜெயகாந்தன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் அங்கு சென்ற போதும் .அவர்களைத் கரையிறங்க மக்கள் அனுமதிக்க வில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இ)

### இராணுவத் தளபதி...

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதான முயற்சிகளின் போது நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் புலிகளுடன் நாம் நடந்து கொள்ளவேண்டும். ஆனால் அவ்வாறான செயல் எமது கௌரவம், மதிப்பு நாம் அணியும் சீருடைக்குரிய பெருமை என்பவற்றை குறைப்பதாக இருத்தலாகாது எனக் கூறியுள்ளார்.

கடந்த வாரம் ஓமந்தையில் கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றபோது இராணுவ, கடற்படைத் தளபதிகளும், வேறும் சீரேஷ்ட அதிகாரிகளும் புலிப்போராளிகளுடன் சம அந்தஸ்துடன் பக்கம் பக்கமாகவும் அமர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அது மட்டுமன்றி விடுவிக்கப்பட்ட புலிப் போராளிகளுக்குப் பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டன. இராணுவத் தளபதி லயனல் பலகல்ல கேணல் தீபனுக்கும் கேணல் பானுவுக்குமிடையே பக்கம்பக்கமாக இருக்க வைக்கப்பட்டார். புலித்தேவன் கடற்படைத் தளபதி தயா சந்தகிரிக்கு அடுத்ததாக அமர்ந்திருந்தார். இது ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டிருந்தது. இந்த விடயம் படைத்தரப்பில் உயர் அதிகாரிகள் மத்தியில அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னியிலுள்ள படைத்தலைமை, இரு தரப்பினரையும் எதிரெதிராகவே அமரும்படியான ஏற்பாடுகளை செய்திருந்ததாயினும், பாதுகாப்பு செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவிடமிருநது மேஜர் ஜெனரல் ஜயசுந்தரவிற்கு கிடைத்த உத்தரவின்படி இரு தரப்பினரும் கலந்து அமரும்படி ஏற்பட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது. பரிசுப்பொருட்களை பாதுகாப்பு செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவே வழங்கியதாகவும் அறியப்படுகிறது.

இதுபற்றி மேற்கு நாடொன்றின் இராஜதந்திரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் தோளும் தோளும் உரசும்படியாக, பக்கம் பக்கமாக புலிப் போராளிகள் இருந்து படங்கள் எடுத்துக்கொண்டமை புலிகளுக்குப் பெரும் பிரசார வெற்றியாகும். அது அவர்களை அங்கீகரிப்பதை விடவும் அதிகமானதாகும் என்று பெயர் குறிப்பிடவிரும்பாத அந்த இராஜதந்திரி தெரிவித்துள்ளார். (ந)

### பாராளுமன்றத்தை...

ஆதரவு தொடர்பாக ஆராயப்பட்டது.

19வது அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்ட முலத்திற்குப் பாராளுமன்றத்தில ஆதரவு கிடைககுமாக இருந்தால் பாரளுமன்றத்தை ஒத்திவைப்பது தொடர்பாக இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை 19வது அரசியல் அமைப்பு சீர்திருத்தச்சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப பெறும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் பாராளுமன்றத்தை ஒத்திவைத்து அதன் ஒரு வருடகால ஆயுள் முடிவடைந்த பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கு ஜனாதிபதி தீர்மானிக்கலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)


**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடல்**

மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக 05.10.2002ல் நடாத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 05.11.2002ம் திகதி பிற்போடப் பட்டுள்ளது.

மாணவர் ஒன்றியம்,
யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம். [5992]

**நீ இருக்க நிலம் வேண்டும் நிலம் இருக்க மரம் வேண்டும்**

**அழகுக்கலை பயிற்சி**

மணப் பெண் அலங்காரம்
முக அலங்காரம்

பயிற்சியளிப்பவர்
திருமதி மலர் விஸ்வநாதன் MA.PGDM.DABTH
(Principal Malar Institute of Beauty Culture India)
நேரம் - காலை-9.30 மணி முதல் பி.பகல் - 4.00 மணி வரை
இடம் - 169/1 கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
இணைந்து நடத்துபவர்
திருமதி நளினி சிவகுமார்- 31/8 சுலைமான் பிறதேர்ஸ் கொழும்பு-05 077-7383846
விபரத்தொடர்புக்கு:-செல்வி உதயமகள் - 077-7875023
செல்வி மீரா - 222-2472
[C/5111]

**கண்ணீர் அஞ்சலி**

கோப்பாய் கிளையைச் சேர்ந்த கண்ணியம் பேக்கரி உரிமையாளரும் முன்னைநாள் (2000,2002ம் ஆண்டு) உபதலைவருமாகிய

**திரு.அருணாசலம் கந்தையா**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

559 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

செயற்குழு உறுப்பினர்களும்
அங்கத்தவர்களும் பணியாளர்களும்
யா.மா.பே.உ.சங்கம்.
[C-5110]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.